KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ௵ ஆகஸ்ட் ௴ 3௳ [No. 30

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 565
2. கம்பராமாயணம் (சடாயு வுயிர்நீத்த படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 567
3. காற்றுமழை (அங்கம் 3. களம் 1.)
Shakespeare's Tempest 570
4. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 6-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 573
5. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை 575
6. கலித்தொகை (பாலைக்கலி, 19)
T. A. கனகசபாபதி முதலியார் 577
7. பொதிகை நிகண்டு (பூ-பெ-பே-பை-பொ-போ-பௌ.)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 578
8. அமீல் (Henri Frederic Amiel)
T. R. இராஜகோபால் 578
9. வர்த்தமானம் 580

கலாநிலயம்

புத்தக வித்தகம்.

ஒரு மனிதனது மதம் அவனுக்கு யாவதாயிருத்தல் வேண்டும்? ஒழிந்த நேரங்களில் விழைந்துசெய்யும் விளையாட்டாக அமைந்தது அன்று அது. நோய்கொண்ட காலத்தில் உட்கொள்ளும் மருந்துமன்று. மதவிடயங்களோடு விளையாடுபவர் வீணர்; மருந்தெனக்கூறி மதத்தை விற்போர் பொய்யர், வாங்குவோர் பேதைகளாவர். நெருப்பணைக்கும் எந்திரவண்டி போல் (Fire-engine) நாம் கடவுளைக் கையாள்கின்ற கயவர்கள் ஆயினோமே என்று ஓர் அறிஞர் அவலமுறுகின்றார். ஆபத்து நேர்ந்தபோது அழைப்பதற் குரியதாக அவ்வெந்திரவண்டி வைக்கப்பெற்றிருக்கின்றதே யன்றி அதற்குப் பயன்வேறில்லை. கடவுளாற் கண்ட பயன் அவ்வளவு தானோ?

விளையாட்டும் மருந்தும் நெருப்பணைக்கும் அந்த இருப்பு எந்திரமும்போல் ஒருவன் மதந்தான் ஒருவனுக்கு நின்றதெனின் அதனினுங் கேடு மற்ற எதனினும் இல்லை. மற்று, மதமென்பது ஒருவனுக்கு யாவ்தா யிருத்தல்வேண்டும்?—ஒருவனது உணர்வேயாயிருக்கவேண்டுமென்று உரைத்தல் தக்கதே. அவ்வுணர்வினிற்கும் உணர்வா யிருத்தல்வேண்டுமென்பது பின்னும் சால்புடைத்து. எனினும் உணர்வோ இல்லாதவர்க்கு இவை வெறுஞ் சொற்களாகி நிற்குமேயன்றி அதனின்று பொருள்விளைந்து தோன்றுவது எங்ஙனம்? ஆதலின், உணர்வு என்னுஞ் சொல்லில் அடங்கிய செய்திகளைக் கருதுவதனினும், செய்கையின் தன்மையால் உணர்வின் இயக்கத்தை ஒருவாறு ஊகித்துக்கொள்ள இயலும்.

“எங்குமயமர்வதோடு எக்காலத்திற்கும் ஏற்றதாய் நிலைநிற்கின்ற நிரந்தர உண்மையாய ஒன்று மட்டுமே நிச்சயம், மற்றவெல்லாம் மாயத்தின் விகற்பங்கள்; தன்னைச்சூழ்ந்திருக்கின்ற நிகழ்காலம் என்னும் சிறையிற்குள் கிடக்கின்றான் மனிதன்” என்று நம் கவி இரவீந்திரர் இயம்புகின்றனர். சிறையைக் கடவாமலேயும் அதன் சுவர்களை இருந்தவிடம் தெரியாமல் உதிருமாறு புரிவது ஒருவன் மதம். கல்லென இறுகி நின்ற நிகழ்காலச் சூழ்ச்சியெல்லாம் பனியெனக் கரைந்து சென்றவிடந் தெரியாமல் தீர்ந்தால் பின் ஒருவன் சிறையினுள் இருக்கின்றான் எனச் செப்புதற் காவதில்லை. சிறையை விட்டுத் தான் வெளிவர வேண்டுமெனும் முயற்சி கைகூடுவதனினும், சிறையின் சுவரே இல்லாமற் போகும்வகை புரிவது எளியதென்னலாம்.

நிகழ்காலத்தில் நமக்குப் புறத்திலே நடைபெறுகின்ற காரியங்களுக்கு நம்மை எங்ஙனம் ஈடுசெய்துகொள்கின்றோம் என்பதைப் பொருந்தியே இந்தச் சிறையின் சுவர் இருப்பதும் இல்லாமல் தீர்வதும் நேர்கின்றது. முன்சொன்னபடி, எக்காலத்திலும் எவ்விடத்திலும் எதன்மாட்டும் நிலைத்திருக்கின்றவோர் நித்தியத்துவத்தின் நினைவு சற்றேனும் இல்லாமையே இச்சிறையின் நான்கு சுவர்களாகும். தம்முடைய காரியங்களிலெல்லாம் மனிதர் பொதுவாக, நித்தியத்துவத்தை மறந்து நிகழ்காலத்திற் கேற்றபடியே விவகரிக்கின்றனர். மதவுணர்ச்சி இல்லாமையே இதற்குக் காரணம் என்போமெனின், அவ்வுணர்ச்சி உடை

யவர் எவ்வாறு ஒழுகுவார் என்பதை இவ்வாசகத்தின் எதிர்முகம் நோக்கி எளிதில் தெளிந்துகொள்ளலாம். என்றென்றும் இருக்கின்ற அந்த நிரந்தரமாய நீர்மையை அன்றன்றுசெய்கின்ற காரியங்களோடு சேர்த்து விவகரிக்கும் தன்மையே ஒருவனுக்கு உள்ளிருக்கின்ற மதம் என்பதன் மேன்மையாம். "எல்லாம் அநித்தியம், ஆதலின் இதனை மறவாமல் இதற்கேற்றபடி உன் வாழ்க்கையை அமைத்துக்கொள்" என்று வற்புறுத்துவார் அறிவுரையாளர்களின் ஒரு சாரார். பொய்யென்று ஒன்றை அறவே மறுப்பது வேறு; உண்மையென்று மற்றொன்றை உறுதிசெய்வது அதனினும் வேறுயது. இவ்வேற்றுமை யாவர்க்கும் எளிதில் விளங்கும்.

அநித்தியமே இவ்வுலக விடயங்கள் அனைத்தும் ஆருக; அதனையுங் கடந்த நித்தியமாயதொன் றுளது. அந்நிரந்தரமான வொன்றின் அம்சமே நாமனைவரும் ஆவோம் என்னும் நிலையை, நினையாமல் நினைக்க வைக்கின்றவர் எவரோ அவரே பெரியவர் என்று நம் இரவீந்திரர் இனிதின் எடுத்துரைத்திருக்கின்றார். (சில ஆண்டுகளுக்குமுன் கவிஇரவீந்திரர் அரவிந்தர்பெருமானைப் புதுவையில் தரிசிக்கச்சென்றபோது தம்பால் தோன்றிய எண்ணங்களை அடக்கியுள இக்கட்டுரை நம் கலாநிலயம் முதலாவது, 1928 வருடம், வால்யூமில் மொழிபெயர்ந்து வந்திருக்கின்றது)—அதன்படி, அநித்தியத்தின் உணர்வு நம்முடைய காரியங்களிலெல்லாம் ஊடுருவி அவைகளை இயக்கும்படி அமைதற்கு யாம் என்ன செய்யவேண்டும் என்பதும், பிறர் நமக்கு இவ்வகையில் யாதுசெய்ய வல்லர்களாயிருத்தல் கூடுமென்பதும் எண்ணி எண்ணித் தெரிந்து கொள்ள முயலுதல் எல்லோர்க்குங் கடன். நிரந்தர நினைவை நாம் நிகழ்த்தும் எல்லாக் கருமங்களுக்குள்ளும் சேர்த்துக்கொள்வதும், நாம் நிகழ்த்துங் கருமங்களால் அந் நிரந்தர நினைவைக் கதுவிக்கொள்வதும் மதவுணர்ச்சி யுடைமையால் விளையுமோர் பண்பாகும். இவ்வாசகத்தை விளம்புதனினும் விளக்குவது அரிதெனும் இரகசியத்தை அறியமாட்டாதார் மிகச் சிலர். எனினும், கல்விமான்கள் இதயத்தில் சுரந்து பெருகுகின்ற மதவுணர்ச்சி இத்தகையது.

ஒன்று உரைத்தல் வேண்டும். கற்றவர் என்ற பேர் உடையவர்கள் அனைவரும் கல்விமான்களல்லர். பிறபயிர்ச்சிகள் இருப்பினும் இல்லாவிட்டாலும், கலையின் தோற்றமாகிய இலக்கிய அறிவு வாய்த்தவர்களுக்குமட்டுமே இக் கட்டுரைவரையில், கல்விமான் என்னுஞ் சொல் பொருந்தும். இதனோடு இலக்கியப் பயிற்சி என்னுமல், இலக்கிய அறிவு என்று கூறுவதையும் கருத்துட் கொள்ளவேண்டும். கணக்கின்றிப் புத்தகங்களை மாத்திரம் புரட்டிப்புரட்டிக்கொண்டிருந்துவிட்டு அப்புத்தகத்தின் வித்தகத்தைப் பெறுமற்போனல் ஒருவன், கடைக்காரன் தன் 'சரக்கு'க்களினிடையே சிறைப்பட்டிருப்பது போன்றே, அவனும் நிகழ்காலச் செய்திகளின் இடையே சிறைப்பட்டுத்தான் கிடக்கின்றான். இத்தகைய ஒரு கல்வியாளன், நிரந்தர நினைவிற் பற்றில்லாதவனாய், தான் படிக்கின்ற புத்தகங்களில் உள்ள வார்த்தைகளினும், அவ்வார்த்தைகளுக்குரிய இலக்கணங்களினும், சரித்திரக் குறிப்புக்களினும் வேறு சில செய்திகளினும் தன்னை முற்றிலும் இழந்தவனாகித் தீர்கின்றான். ஜீவக சிந்தாமணியில் கூறப்பட்டுள்ள "எலிமயிர்ப் போர்வை" என்பது யாது என்னும் வாதம் ஒன்று இப்பொழுது சில தமிழ் இலக்கியப் பத்திரிகைகளில் நிகழ்ந்துவருவதைச் சிலர் கண்ணுற்றிருக்கலாம். இலக்கியத்தில் தம்மை இழந்துகொண்டமைக்கு இஃதோர் ஏற்ற உதாரணம். இது கடைபரப்புவதன்றிக் கல்வியோ தெரிவதன்று. இத்தகைய கல்விக்கடைக்காரராகாமல் மனிதரைக் காக்கவல்லது நாம் முன்சொன்ன மதவுணர்ச்சியே. அல்லது, அது, ஒருவன் வைத்த கடை மற்றவனுக்குப் பயன்படுமாறேனும் செய்யும். ஏனெனில் மதவுணர்வுடைய அனைவரும் அதனைப் பொதுவுறக்கொண்டவர்களாதலின் மற்றவர்களினும் அதன் இருப்பைக் கண்டு பாராட்டக்கூடியவர்களாகலாம். இன்னோர்க் கிடையில் சரக்கு வேறுவேறாகி இருப்பினும் சாரம் ஒன்றே.

நன்று, இனி, அக்கல்விமான் கண்டுகொள்ளும் அம்மதந்தான் யாது? ஒன்று நிச்சயம்; அவன் பண்டைக் காலத்தில் தன் கருத்தைச் செலுத்தினவனாகி இருக்கின்றான். ஆதலாற்றான், நிகழ்காலச் சிறைவிட்டு நீங்காத ஏனையோர் கல்விமான்களை வீண் என்று கருதி, அவன்பால் கொண்டாடுவதற்குரியது யாதும் இல்லையே என்று மறுக்கின்றனர். மறுத்து, நலனில்லா நாடகக்காரிகளை நயந்து நனி நோக்கிப் பொருள்மிகக் கொடுக்கின்றனர். (இந்தச் செய்தி இந்தியாவில் மாத்திரம் அன்று, இங்கிலாந்திலும் இப்படியே). மற்று கல்விமானைக் கேட்டாலோ, "பண்டைய தென்பது காலத்தால் பண்டையதென் றுரைக்க நிற்கின்றதேயன்றி வாய்மையை நோக்குங்கால் என்றென்று முள்ளவோர் மெய்ம்மையையே அதனில் யான் உணர்ந்துவக்கின்றேன்" என்று இயம்புவான். இறந்தகாலச் செய்திகளை நிகழ்காலக் கருமங்களாம்படி மாற்றித் தருகின்றதுஅவனுக்கு அவன்மதம். பண்டையசெய்தியில் அவன் தேடுவதும், அவனால் தேடக் கூடியதாயிருப்பதும் நிரந்தரமான வோர் நிலையே. இந்நிரந்தர நிலையில் அவனுக்கு நம்பிக்கையுளது, மற்றவர்களை நம்பும்படி செய்யும் ஆற்றலும் உளது; ஏனெனில் பண்டைய செய்திகளில் அவன் அதனைத் தேடுவதுமன்றிக் கண்டவனும் ஆகின்றான்.

இன்னவாறு பண்டைய அரும்பெரும் புத்தகங்களோடு உணர்வுகொண்டு பேசிப்பேசிப் பயில்கின்றவர் ஐயமற வோர் நிரந்தரநீர்மை எங்கும் நிலைத்திருக்கக் காண்பதே உண்மை. இவ்வுண்மை தன்மனத்தின் கண் தோன்றப்பெற்ற வோர் கல்விமான், இருள்கடிய விளக்கினைத் தாங்கிவரும்நல்லோர் வரிசையில் தானும் ஒருவனாவதைத் தெரிந்துகொள்ளலாகின்றான். மனிதருக்கு வரக்கூடிய வேட்கைகளில் மிகவும் உன்னதமானது யாதெனில், வாழ்க்கை வீணே கழியாமல் பயன்படுதற்குரியவோர் வேலை தமக்கு வேண்டும்என்னும் வேட்கையே. அவ்வேலையும் தான் இறந்தவுடன் நின்றுவிடுவதாயிருத்தல் ஆகாது. ஆதலின், கல்விமானாய வொருவன் தான் பண்டைப் புத்தகங்களிலிருந்து பெற்று ஏந்தியிருந்த அவ்விளக்கை மற்றொருவன் கைகளில் கொடுத்துவிட்டு அகல்கின்றான். எனினும், அவ்விளக்கு எரிகின்ற ஒளியின் உயிருடையதாயிருத்தல் வேண்டும். இருக்குமாயின், அவன் கல்வியை மாத்திரமன்றி அதுகொண்டு செய்யவேண்டிய காரியமும் பிறர்கையிற் உரியவகையிற் சேர்த்தபடியாகும். என்னின், கல்விமுறை யனைத்திலும் நாம் கருத

வேண்டியது யாதெனில், மாணவர் சிலவற்றைக் கற்பவர்மாத்திரமன்றிக் காண்கின்றவர்களாவதுடன் காரியத்திற்கியன்ற கருத்தும் உடையவர்களாதல்வேண்டும் என்பதே. பண்டைய நூல்களைப் படிக்குந்தோறும் இவர்களுக்கு எத்துணை இன்பம் உண்டாகின்றதென்பதே இவர் பயனுறக் கற்கின்றனர் என்றறிதற்கு உரிய அளவுகோலாகும். சுவையற்ற நூல்களைப் பதிப்பிக்குந் திறமையிற் பாராட்டுதற்கேற்றது ஒன்றுமில்லை. சுவையுடைய நூல்களைப் படித்து இன்புறத்தக்க பாக்கியமே பயனுடையதாகும். உண்மைக்கல்விமான் ஒருவன் பண்டைய நூல் ஒன்றைப் படிக்கின்றானெனின், அது அதன்கண் உள்ள பாடபேதங்களைக் குறித்துக்கொள்வதற் கன்று. மற்று, என்றும் பழையதாகாத வோர் நிரந்தர அழகை அந்நூலை யியற்றிய புலவர் எவ்வாறு கண்டுரைத்தார் என்பதைத் தானும் கண்டுகொள்வதற்கே யாம். இந்தப் பரிசினைக் கண்டுகொள்கின்றவர் தொகை அதிகரிக்க அதிகரிக்க, அவ்வழகு மனிதர்தம் உடைமையாவது மேன்மேலும் நிச்சயம். ஏனெனில், இதனைக் காண்கின்ற ஒவ்வொருவனும் தனித்தனி, தன்னுடைய இயற்கைக்கு ஏற்க, அதனில் பின்னுஞ் சில புதுமைகளைக் கண்டுகொண்டு மற்றவர்க்குக் கொடுப்பவனாகின்றான். நிரந்தரமாயவொன்றிற்கு அலகும் இல்லை. அலகிலா இந் நிரந்தர நினைவு பற்றி உண்மையாகச் சொன்ன வொன்றைத் திருப்பிச் சொல்வதோடுமட்டும் ஒருவராலும் நின்றுவிட இயலாது. அதனை ஆதாரமாகக் கொண்டு விளைகின்ற அனுபவம் ஒவ்வொன்றும் புதியதே. அனுபவிக்கப்படுகின்ற விடயம் ஒன்றேயாயினும், அதனை அனுபவிக்கின்ற மனங்கள் வேறுவேறாயபடியால் இப் புதுமை விளைகின்றது. இந்த நிரந்தர நிலையின் அனுபவத்தை நம்முடைய வாழ்நாட்களுள் ஒருமுறை எய்துவோமாயின், மனிதஇனம் தம் புதுமைமாறாமல் என்றென்றும் இருப்பதற் கேற்றவோர் உதவியைச் செய்தவர்கள் ஆவோம்.

பண்டைய நூல்களை உவந்து பயில்வதால் விளையும் பயன் இத்தகைய தாதல்பற்றியே, கலாநிலயம், அவைகளைப் பயில்வதற்குரிய சாதனங்களை அமைத்துத் தரவேண்டுமென்னும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றதென்பதை நமது நண்பர்கள் அறிந்திருப்பார்கள் என நம்புகின்றோம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்— 8. சடாயு வுயிர்நீத்த படலம்.

[554-வது பக்கத் தொடர்ச்சி]

கூனியு மரக்கனுங் கூறுகோண் டேற்றனர்.

இராவணன் என்னும் பெயரையும் அரக்கன் என்னுங் குலத்தையும் உரையாமல், வலிமையும் செல்வமும் பெருமையுஞ் செப்பித் தன் சரித்திரத் தலைவன், 'மந்திரத் தருமறை வைகும்நாவினன்' ஆவதும், "குணங்கள் மேன்மையான்" ஆவதும், வெம்மைதீர் ஒழுக்கினோடு விரிந்த கேள்விவாய்ந்து செம்மையனாவதும் இக் கைதவத்துறவி வற்புறுத்தினானேனும், தீத்தொழி லரக்கரோடு இலங்கைத்தீவினைப் பிணைத்து நினைத்தல் சீதைக்குப் பெரியதோர் காரியமன்றாதலின், அரக்கருறவிற் கவாவிய இத் துறவின்கோலத்தைக் கண்டு இறும்பூ தெய்தினவளாய்,

> வேதமும் வேதிய ரருளும் வெஃகலாச்
> சேதனை மன்னுயிர் தின்னுந் தீவினைப்
> பாதக வரக்கர்தம் பதியின் வைகுதற்
> கேதுவென் னுடலமு மிகையென் றெண்ணுவீர்.

[முற்றிய துறவினால் உடம்பையும் மிகை என்று நினைக்கும் நிலையில் உள்ளவரே, வேதங்களையும் அந்தணர்தங்களுடைய அருளையும் வேண்டாமல், உணர்வுவாய்ந்த பிராணிகளைத் தின்னும் கொடிய வினைகளைச் செய்கின்ற பாதகர்களாகிய அரக்காது நகரில் நீர் ஏன் தங்கினீர்]

> வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர்
> புனத்திரு நாட்டிடைப் புனித ரூர்புக
> நினைத்திலி ரறநெறி நினைக்கி லாதவர்
> இனத்திடை வைகினி ரென்செய் தீரென்றாள்.

[வனத்தில் சிறந்த முனிவர்களுடன் தங்காமல் போனீர்; கொல்லைகளையுடைய அழகிய நாட்டின்கண் பரிசுத்தமானவர் வசிக்கின்ற ஊர்களுக்குச் செல்ல நினைக்காமற்போனீர்; மற்று, தருமநெறியை நினைக்காத இராக்கத இனத்திற்கு நடுவே தங்கினீர். என்ன காரியம் செய்தீர்]

என்று கழறலுற்றாள். கேட்டனன் நீறுபூத்த நெருப்பனைய இம்முனிவன். பலபடப்பகர்ந்த அவ்விலங்கை வேந்தன் பெருமையொன்றும் இவள் உள்ளத்தைத் தீண்டுதலின்றியே பகர்வோன் திறத்தொரு பழியுடை ஐயமே அவள்பால் மூண்டெழக்காண்கின்றான். எவ்விடை இறுப்பான் இதற்கு? திகைக்கின்றான். அவன் புனைந்துரைசெய்த வன்மைக்கெதிரே யொரு மடவாள்கேள்வி வாயைமடக்கிவிட்டது. என்செய்வான்.

> மங்கையஃ துரைத்தல் கேட்ட
> வரம்பிலான் மறவிற் றீர்ந்தார்
> வெங்கண்வா ளரக்க ரென்ன
> வெருவல மெய்ம்மை நோக்கில்
> திங்கள்வாண் முகத்தி னாயத்
> தேவரிற் றீய ரல்லர்
> எங்கள்போ லியர்க்கு நல்லார்
> நிருதரே போலு மென்றான்.

இச் செய்யுளிற்கு உரை அவ் விராவணனே சொல்லலாற்றான், திண்ணம். மறவிற் றீர்ந்தார், என்பது குற்றத்தின் மிகுதியையோ அல்லது குற்றம் நீங்கிய தன்மையையோ குறிக்கின்றது? தேவர்தாம் அரக்கரின் எங்ஙனம் தீயரோ, 'எங்கள் போலியர்க்கு நல்லார் நிருதரே' எங்ஙனம் ஆவாரோ, —அவனும் அறியான், மற்று இச்சொற்களால் சீதைக்கு ஒன்று அறிவுறுத்த நினைத்தவனு மல்லன். மனங்குழம்பி நாத்தடுமாறுகின்ற இந்நிருதன் ஏதோ இயம்பப் புகுந்து யாதுங் கைவராமல், இந்த இக்கட்டினின்று தப்பும்வண்ணம் பொருள் மிகநுட்பமாகிப் பொதிந்தன போன்ற சில வாசகங்களை வளைத்துவளைத்துப் பேசுகின்றபரிசு இப்பாசுரத்தில் காணலாமேயன்றி, தான் தெளிந்த வொன்றை மற்றவர்க்குத் தெளிவுறுத்துந் தன்மையை இதனிற் றேடிற் பயனில்லை. 'நிருதரே போலும்' என்னுமந்த ஒட்பில்போலியே குழம்பிய வொருவன் குழப்பவும் முயல்கின்ற கொள்கையைக் காட்டித்தரும். இன்னணம், பொருளிலா மொழிகளால், தெரு

ட்டுவார்போல் புரியும் இவ் வஞ்சனைத்திறத்தில் இவ்விராவணன், கொடுமனப் பாதகர்தம் இனத்திற்கெல்லாம் ஒரு தனித் தலைவனாய் நிற்கின்ற இயாகோவை விஞ்சுதல் அரிது. ஷேக்ஸ்ப்பியர் எழுதிய 'ஒத்தெல்லோ' என்னும் நாடகத்தின்கண் வருகின்ற துஷ்டன் அவன். உத்தம பத்தினியாகிய பேதை டெஸ்டிமோனாவின்பால் அவள் நாயகன் ஒத்தெல்லோ வென்பவன் வைத்திருந்தவோர் கரைசெயற்கரிய பெருங்காதலெல்லாங் கெடும்படி அவள்மீது அடாப்பழி சுமத்திப் புறங்கூறி அவன் மனத்தை இவ் வன்னெஞ்சுடைய பாவி திரித்துவிட்டான். தன்னைவஞ்சித்து இம்மனைவி வேறொருவனோடு புறவொழுக்கம் பூண்டனள் என்று வீணே எண்ணியெண்ணிக் கனன்ற மனத்தினனாய் அவ் வொத்தெல்லோ பித்தேறியவனென்ன அவளை, அவளுறவினன் லாடொவிக்கோ என்பான்முன் நிந்தித்துப் புடைத்துப் போயபின், லாடொவிக்கோவிற்கும், அருகுநின்று தன்னால் விளைந்த தீமையைத் தானே தெரியக்கண்டிருந்த இயாகோவிற்கும் இடையே பின்வருமாறு பேச்சுநடக்கின்றது:—

Lodovico:—

Is this the noble Moor whom our full senate
Call all-in-all sufficient ? Is this the nature
Whom passion could not shake? whose solid vir-
The shot of accident; nor dart of chance, [tue
Could neither graze, nor pierce ?

Iago:— He is much changed.

Lodovico:—

Are his wits safe ? is he not light of brain ?

Iago:—

He's that he is: I may not breathe my censure.
What he might be-,if, what he might, he is not-
I would to Heaven, he were!

(Act IV. Sc. I. Lines 256—263)

இதன் ஈற்றிரண்டடிகளின் பொருள் இன்னதென்றுணர்ந்தவர் இதுகாறுமில்லை. கேட்ட கேள்வியைக் குழப்புத லல்லால்வேறு இந்தச்சொற்களின் கருமம் மிகச் சிறிது. "அவன் யாவதா யிருக்கவல்லவனோ,—அவன் இருக்கவல்லவாறு இருக்கவில்லை யெனில் - இருந்தாற்றான் ஆகாதோ என்று பிரார்த்திக்கின்றேன்" என்னு மிது பொருளொன்றுங் காட்டாமல் புரிகின்றவொரு சொற்சாலம். உரைகாண வருவோர் மயங்குமாறே, இயாகோவைக் கேள்விகேட்டவனையும் மயக்கத்துட்படுத்தி உழக்கும்படி இழைத்ததோர் வாசகம். இராவணன் இங்குச் சீதைக் குரைத்ததும் இத்தகையதே. இராமனுக்கு முடிபுனை நன்னாள் நண்ணிய போது, பிறர் வாழக்கண் டாற்றாத் துன்னருங் கொடுமனக் கூனி, இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல், களத்துள் வந்து தோன்றினாள் எனக் கம்பர் முன் கூறினார். அழுக்காறுடைய கொடுமனக் கயமையை அக்கூனி இந்த இயாகோவின்பால் பெற்றாள்; மற்று அவ்வியாகோவின் மொழியினால் உழக்கும் மாயத்தை இவ் விராவணன் பெற்றான். இராவணனும், அவனிழைத்த தீமைபோல் தோன்றிய மந்தரையும், கயவர் தலைவனான இயாகோவின் புன்மையைக் கூறிட்டுக் கொண்டுவிட்டார்.

சொல்லால் ‹முழக்கப்புகுந்த இராவணன்முயற்சி மடமையிற்கனிந்த வனிதை இச்சீதையின்பால்பயன்படாமற் போயிற்று. இச் சொற்கள் தனக்கு விளங்கவில்லையாயினும், அந்தக் காரணத்தினாலேயே அதனில் ஏதோ ஆழ்ந்தபொருள் அமைந்திருத்தல்வேண்டுமென நினைத்து, முனிவன் குழப்பியமொழிகளுள்ளுமமைதியுளதென் றெண்ணுவகை அவள் பேதைமையே அவளைக் காத்தது. செய்த செய்கை எதிருக்க இவன் சொன்ன சொற்களைப்பற்றிச் சிந்திப்பானேன். தேவரில் அரக்கர் தீய ரல்லாமை எங்ஙனமென்று வினவினாளல்லள். நும்போலியர்க்கு நிருதர் நல்லவராதல் எங்ஙனம் என்று கேட்டாளல்லள்; அவை மிகை. சிறுமைதான் சுற்றமாய்ச் சூழ்ந்துவிடும் என்பதை உணர்வாளாதலின்,

சேயிழை யன்ன சொல்லத்
தீயவர்ச் சேர்தல் செய்தார்
தூயவ ரல்லர் சொல்லிற்
றொன்னெறி தொடர்ந்தோ ரென்றாள்
மாயவல் லரக்கர் வல்லர்
வேண்டுரு வரிக்க வென்ப
தாயவ ளறித றேற்றா
ளாகலி னயலொன் றெண்ணாள்.

[இராவணன் அப்படிச் சொல்ல, செம்மையான, ஆபரணங்களை அணிந்த சீதை, மாயையில் வல்ல அரக்கர்கள் வேண்டிய உருவத்தைக் கொள்ளக்கூடியவர் என்பதைத் தேறியறியாளாதலின், வேறு ஒன்றும் கருதாமல், "தொன்மையான நன்னெறியைத்தொடர்ந்தவரும், சொல்லுங்கால், தீயவர்களைச் சேர்ந்தார்களாயின் தூய்மை யுடையவர் என்று எண்ணுதற் குரியவர் அல்லர்" என்றாள்]

இது கேட்ட இராவணன்,

அயிர்த்தன ளாகு மென்றோ
ரையுற வகத்துக் கொண்டான்
பெயர்த்தது துடைக்க வெண்ணிப்
பிறிதுறப் பேச லுற்றான்
மயக்கறு மூலக மூன்றின்
வாழ்பவர்க் கனைய வல்லோர்
இயற்கையிற் றிரியி னல்லா
லியற்றலா நெறியென் னென்றான்.

[தான் யாரென்பதைச் சீதை சந்தேகித்தாளோ என்று ஓர் சந்தேகம் தன் மனத்திற் கொண்டவனாகி, சீதையின் சந்தேகத்தைத் தீர்க்க எண்ணி, வேறு விதமாகப் பேசப் புகுந்து, "மயக்கமற்ற இம் மூன்று உலகங்களிலும் வாழ்பவர்க்கு, அத்தகைய வலியுடைய அரக்கருடைய தன்மைக்குத் தகுந்தவாறு தாமும் தம் குணத்தைமாற்றிக்கொண்டு ஒழுகுவுதலல்லால் அநுசரிக்கக்கூடிய வழி வேறு என்ன இருக்கின்றது"—என்றான்]

வலியவர் தீயராயின் அவரோடு இணங்கி வாழ்தலன்றி வேறுநெறி யின்மையால் தானும் அவ்வரக்கன் உறவினை நாடலாயினன், என்னுங்கால், தீயவர் உறவினுள் தான் வற்புறத்தப்பெற்று நனி வருந்துகின்றான் என மதித்த நங்கை, அவனைத்தேற்றுவாளாகி,

திறந்தெரி வஞ்ச னச்சொற்
செப்பலுஞ் செப்ப மிக்காள்
அறந்தரு வள்ள லீண்டிங்
கருந்தவ முயலு நாளுள்
மறந்தலை திரிந்த வாழ்க்கை
யரக்கரை வருக்கத் தோடும்
இறந்தனர் முடிவர் பின்ன
ரிடரிலை யுலக மென்றாள்

[பேசும் திறமறிந்த வஞ்சகன் அந்த வார்த்தையைச் சொன்னதும், செம்மைக்குணம் மிகுந்தவளாகிய அவள்,

"தருமத்தை வளர்க்கும் வள்ளலாகிய காகுத்தன், இப்பொழுது இங்குத் தவம்செய்கின்ற காலத்திற்குள், பாவத்தின்பால் மாறிய வாழ்க்கையையுடைய அரக்கர்கள் அவர் இனத்தோடும் இறந்தொழிவார்; அதன்பின், நீ சொல்லியபடி அவ்வரக்கருக்கு இணங்கி நடக்கவேண்டிய துன்பம் இவ்வுலகத்திற்கு இல்லாமற்போம்" என்றாள்]

தன்னுடைய சாபத்தைத் தானே நயந்து தேடிக்கொண்டான்போல் இதனைத் கேட்டனன் இராவணன். அஞ்சலென்று அவள் பரிவினோடும் புகன்ற மாற்றம் இவன்நெஞ்சில் ஊசியென்னத் தைத்தது. அப்புண்ணின்று பெருகுஞ் சோரிஎன்னச் சில சொல்லலுற்றான்—

மானவ னுரைத்த லோடும்
மானிட ரரக்கர் தம்மை
மீனென மிளிருங் கண்ணாய்
வேரற வெல்வ ரென்னின்
யானையி னினத்தை யெல்லா
மிளமுயல் கொல்லும் பின்னுங்
கூனுகிர் மடங்க லேற்றைக்
குருளைமான் கொல்லு மென்றான்

[மான்போன்ற சீதை அவ்வாறு சொல்லவும், இராவணன், "மீன்போல்விளங்குகின்ற கண்களையுடையவளே, அரக்கர்களை மனிதர்தாம் அடியோடுவென்று அழிப்பாரானால்—யானைக்கூட்டத்தை யெல்லாம் இனி இளமுயல் கொன்றுவிடும்; அன்றியும், வளைந்தநகங்களையுடைய ஆண்சிங்கத்தை மான்கன்றும் கொன்றுவிடும்—என்றான்]

இதற்கெதிரியம்பல் எளியதே. சீதையும், வேறொன்றும் பகராமல் உதாரணங்கள் காட்டுவாளாகி,

மின்றிரண் டனைய பங்கி
விராதனும் வெகுளி பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக்
கரன்முதற் கணக்கி லோரும்
பொன்றிய பூச லொன்றுங்
கேட்டிலீர் போலு மென்றாள்
அன்றவர்க் கடுத்த துன்னி
மழைக்கணீ ரருவி சோர்வாள்

[மின்னல் திரண்டதுபோன்ற மயிரையுடைய விராதனும், வெற்றியே எப்பொழுதுங் கண்டுள்ளவனும் கோபத்தால் தவித்த மனத்தையுடையவனும் ஆகிய கரன்முதலிய கணக்கற்ற அரக்கர்களும், இறந்தொழிந்தபோரைப்பற்றி நீர்யாதுங் கேள்விப்பட்டதில்லைபோலும் என்று சொல்லி, அக்காலம் அவர்களுக்குநேர்ந்ததை நினைத்துப் பரிவினால் மேகம்போன்ற தன் கண்களிலிருந்து நீரை அருவிபோற் சொரியலானாள்]

மானிடரும் அரக்கரைக் கொல்லவல்லரோ என்பதே இங்குக் கேள்வியாதலின், 'விராதனும் கரனும் அனையோர் வீழ்ந்தவா றறியீரோ' என்றவளவில் அதற்கு உத்தரங்கூறினளே யன்றி, "என்னொரு நாயகன் காண் அக்கொற்றவன்" என்றக்கால் அது மிகைபட வந்த மேம்பாட்டுரையாமென்று நாணி அவ்வடக்கமுடைய மங்கை பகர்ந்திலள். செவிகளூடு இச்சொற்கள் நுழைக்க இராவணன் எயிறுதின்றான் உளதேயன்றி ஏற்றது எதிருரைக்கு மாற்றமிலனாய்த் தாழ்கின்றானென்பதோராமல், பெருந்திற லரக்கர்தம் வன்மையை அவரொடு பழகிக் கண்டுகொண்டிருக்கும் இம்முனிவன், நிருதரை மனிதர் வென்றனரென்றதை நம்புதற் கியலாமல் கபடற்ற தன் சிந்தையால் திகைக்கின்றானென மதித்த நம்பேதைமீண்டும்.

வாளரி வள்ள றன்னா
லிங்கைமா நிருத ரெல்லாங்
கேளொடு மறியு மாறும்
வானவர் கிளரு மாறும்
நாளையே காண்டி ரன்றே
நவையிலி ருணர்கி லீரோ
மீளருந் தருமந் தன்னை
வெல்லுமோ பாவ மென்றாள்

[ஒளிபொருந்திய சிங்கம்போன்ற வள்ளலாகிய இராமபிரானால், இலங்கையிலுள்ளபெரிய அரக்கர்கள் அத்தனைபேரும் உறவினருடனே அழிவதையும், அதனால் தேவர்கள் இனிப் பொலிவுபெறுவதையும் நாளைக்கே நீர் பார்ப்பீரன்றோ! ஒருபோதுந் தோல்வியடைந்து திரும்புதல் இல்லாத தருமத்தைப் பாவம் வெல்லுமோ; குற்றமற்ற முனிவராகிய நீர் இதனை உணரவில்லையோ—என்றாள்]

பாவத்தைத் தருமம் வெல்லும் என்னாது, அதன் எதிர்முறை வாசகமாகத் தருமத்தைப் பாவம் வெல்லாதென இவள் தணித்துரைத்த மென்மை பாராட்டற் குரியது. இத்துணை அறிவதற்கும் இயலான்போலும் கரவிலா இம்முனிவன் என்று சானகி வியந்தனளாய் நின்றபோது—

தேனிடையமுதளாயவன்னமென்சிலசொன்மாலை
தானுடைச்செவிகளூடுதவழுறத்தளிர்த்துவீங்கும்
ஊனுடையுடம்பினானுமுருகெழுமானமூன்ற
மானிடர்வலியரென்றமாற்றத்தாற்சீற்றம்வைத்தான்

[தேனோடுஅமிர்தம் கலந்ததுபோன்ற, சீதையின், மெல்லிய சில சொற்களின் வரிசை இராவணனுடைய செவிகளுக்குள்ளே தவழ அதனால்பூரித்துப் பெருக்கும் ஊனையுடைய உடம்பினனாகிய இராவணனும், மனிதர் அரக்கரினும் வலியவர் என்ற சொற்கேட்டு மானம் தன் மனத்திடையே தைக்க, கோபங்கொண்டான்]

இராவணன், முனிவரன் வேடங்கொண்டு முயல நினைத்தொன்று, மற்று, இவ்விருவரும் இயற்கையுற ஒருவரைத் தொடர்ந்து ஒருவர் உரைகள் இயம்புவதால் முடிந்தவகை வேறு. மாபெருந்திறல் இலங்கை வேந்தன் தன் செல்வநலன்களை உடன்ஒக்க உவந்து துய்க்க மனக்கினியாளொருத்தியை நாடுகின்றானென நவின்றவளவில், அன்னதற் கவாவி இப்பெண், தானே அவ்வின்பத்திற் குரியளாமாறு வெஃகிய சில இங்கிதங்கள் மெல்லெனப் பேசுவாளெனும்நசையைநம்பி, பின் னவளை எளிதில் தன்னகர் உய்த்தேகலா மென நினைத்துத் தன் கட்டுரையைத் துவக்காலாயினான் இம்முனிவரன்வேடம்பூண்டமூடன். பெண்ணின்பாலும் எண்ணியவா றொரு கருமம் ஆதலரிது. அவளோ, "தூயராயின் நீர், தீயரோடு பயிலப் புரிந்ததேன்" என வினவிவிட்டாள். தான் சூழ்ந்துவந்த வஞ்சனைக்குள் இராவணன் இக்கேள்விக்கு இடந்தந்திலனாதலின், அதனின்று இவர் உரை முற்றிலும் வேறானவோர் நெறியிற் சென்று இறுதியில் இராவணன் சீற்றமாகச் செறிய நேர்ந்தது. இனி, இவன் கழறும் வீரவாதம் இவனது வேடத்தை வெளிப்படுத்தவில்லையேனும் அதன்கரவினை மெலிவிக்காமலென்செய்யும்.

சீறினனுரைசெய்வானச்சிலைவலிப்புல்லியோர்கட்
கீறொருமனிதன்செய்தானென்றெடுத்தியம்பினையேல்
தேறுதிநாளையேயவ்விருபதுதிண்டோள்வாடை
வீறியபொழுதுபூளைவீயெனவீவனன்றே

[கோபங்கொண்ட இராவணன் சொல்வான்—அற்பமான வில்லாற்றலுடைய கரன் முதலியவர்களுக்கு ஒரு

மனிதன் முடிவைச் செய்தான், என்று சிறப்பாகச் சொன்னுயானல், நாளைக்கே தெரிந்துகொள், இராவணனுடைய இருபதுதோள்களினின்று காற்றுவீசி அடிக்கும்பொழுது, அம்மனிதன், பூளைப்பூப்போல அழிவானன்றே]

மேருவைப் பறிக்க வேண்டின்
விண்ணினை யிடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின்
நெருப்பினை யவிக்க வேண்டின்
பாரினை யெடுக்க வேண்டின்
பலவினை சிலசொல் லேழாய்
யாரெனக் கருதிச் சொன்னுய்
இராவணற் கரிதென் னென்றான்.

பலவினை யிவன் புரியவல்லவனுயினும் வீணிற்குச் சில சொல்கின்ற ஏழையோ சீதையல்லள். எதிர்மாற்றம் இவளுக்கு எளிதில் உளது—

அரண்டரு திரடோள் சால
உளவெனி னற்ற துண்டோ
கரண்டநீ ரிலங்கை வேந்தைச்
சிறைவைத்த கழற்கால் வீரன்
திரண்டதோள் வனத்தை யெல்லாம்
சிறியதோர் பருவந் தன்னில்
இரண்டுதோ ளொருவ னன்றே
மழுவினு லெறிந்தா னென்றான்

[காவல்செய்யும்திரண்டதோள்கள் மிகமிக ஒருவனுக்கு இருக்கின்றனவென்றால், அதனாலே வலிமைஅதிகம்உண்டு என்று கொள்ளலாமோ! நீர்க்காக்கைகள் வாழ்கின்ற கடலால் சூழ்ந்த இலங்கையின்வேந்தனை அவ்விராவணனைச் சிறையில் வைத்த, வீரகண்டை யணிந்த கால்களையுடைய வீரனை கார்த்தவீர்யார்ச்சுனனுடைய, திரண்ட காடுபோன்று அடர்ந்த ஆயிரம் தோள்களையும் இரண்டு தோள்களுடைய ஒருவனுகிய பரசுராமன், தனது இளம் பருவத்திலே, மழுவினால் வெட்டி யொழித்தான் அன்றோ—என்றாள்]

சீதையின் இச்சொற்களோடு இராவணன் பரிபவம் இன்னும் முதிர்கின்றது. 'அப் பரசுராமனையும் வென்றவன்காண் இராமன்' என இவள் பின்னும் மேன்மேல் நவின்று முடிப்பது இங்கு மிகையென்று தன்னுடைய அடக்கத்தால் சொல்லாமல் விட்டாளேனும், அம்முடிவு இராவணன் உள்ளத்தை ஓயாமல் உறுத்தியிருக்கும். முன்னே எழுந்த சீற்றம் பின்னும் பொங்குவா னயினன்.

என்றிவ ளுரைத்த லோடும்
எரிந்தன நயனந் திக்கிற்
சென்றன திரடோள் வானந்
தீண்டின மகுடந் திண்கை
ஒன்றொடொன் றடித்த மேகத்
துருமென வெயிற்றி னேளி
மென்றென வெகுளி பொங்க
விட்டது மாய வேடம்

[என்ற வார்த்தைகளை இவள் சொன்னவுடன், இராவணனுடைய கண்கள் நெருப்பென எரிந்தன; திரண்ட தோள்கள் வளர்ந்து திக்குக்களை எட்டின; முடிகளெல்லாம் வளர்ந்து வானத்தைத் தொட்டன; வலிய கைகள் ஒன்றேடொன்று அறைந்தன; மேகத்தின் இடிமுழக்கம் போல்பல்வரிசைகள் கடித்தன. இவ்வாறு கோபம் பொங்கியதனுல் அவன் கொண்டிருந்த மாயவேடம் தானே நீங்கிவிட்டது]

வேடமோ புனைந்துவந்தும் இராவணன் தன்னையே விளம்பிக்கொண்டு வான்மீகத்தில் துவக்கியதற் கெதிராக அவ் வேடம் அவனையும் அறியாமல் நீங்கிவிடும்படி இங்கு முடிந்தவிதம் இது. இவ்வேடத்தால் குறித்த பயனும் அது நீங்கியதற்குக் காரணமும் அமையுமாறு இக் களத்தினைக் கம்பர் நிகழ்த்துமாற்றால் நாடகக்கலையின் பொலிவு இவர்பால் நன்கு தோன்றுகின்றது.

காற்று மழை

Shakespeare—"The Tempest"

[557-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

இடம்:—ப்ராஸ்ப்பீரோவின் குகையின் முன்புறம். பர்டினண்ட் ஒரு மரக்கட்டையைச் சுமந்து கொண்டுவருகின்றான்.

பர்டினண்ட்:—வருத்தமுடைய விளையாட்டுக்கள் சில உள; அவைகளுக்குரிய உழைப்பே அவைகளில் உள்ள உவகையை எடுத்துக்காட்டுகின்றது. (1). இழிவுடைத் தொழில்களிற் சிலவகைகள் பெருமையுடன் பொறுக்கப்படும். (2). மிகமிக ஏழ்மை வாய்ந்தவை சில திருவுடை முடிவினைக் குறிக்கலாகலாம் (3). இந்த வென் இழிதகை வேலை, எனக்கு அருவருப்பு ஆகுமளவு பாரமு மாதல்வேண்டும்; எனினும், நான் ஆட்செய்யுந் தலைவி இறந்ததற்கு உயிரூட்டி எனது உழைப்பையோ மகிழ்ச்சியாக மாற்றிவிடுகின்றாள் (4). ஆஹா; தன் தந்தை எத்துணை முரடோ அதனின் பதின்மடங்கு மென்மையளா யிருக்கின்றாள் இவள்(5)—கொடுமையையே கூட்டி அமைக்கப்பெற்றவன் அவன். இம்முருடுகள் சில ஆயிரம் யான், கொடிய கட்டளைப்படி

குறிப்பு:—பெரியமனிதர் என்ற நிலையில் இருந்துகொண்டு ஆசையின் ஆவலால் பாதகர்களாகின்ற, ஸபஸ்ட்டிய அன்டோனியோக்களின் சேர்க்கையைப் பார்த்தோம். தாழ்ந்தநிலையில் இருந்தும் அப்படியே ஒழுகுகின்ற ஸ்டீப்பானே ட்ரின்குலோ காலிபன்களின் போக்கையும் பார்த்தோம். இனிக் காட்சியை மாற்றிக் காதலர் இருவரை ஷேக்ஸ்ப்பியர் இங்குக் காட்டுகின்றார்.

(1) பந்தாட்டம் போன்ற சில விளையாட்டுக்களில், வியர்க்கவியர்க்க வருந்தி உழைக்கநேர்கின்றது. ஆயினும் அவ்வருத்தத்தைத் துன்பமெனக் கொள்ளார்; உழைக்க வேண்டியிருப்பதே அவ் விளையாட்டில் கொள்ளப்படும் உவகைக்குக் காரணமாகின்றது.

(2) சில தொழில்கள் இழிவுடையனவாயினும், செய்யும் நோக்கத்தின் பெருமையைக் கருதி அவ்விழிவையும் மனிதர் பொறுமையுடன் மேற்கொள்வார்.

(3) எளிமையுறச் செய்யப்படுவன சில, ஒருவனைச் செல்வமும் சிறப்பு முடையவனுக்கலாம்.

(4) தலைவி-மிராண்டா. "கட்டை சுமத்தல், பாரத்தைத் தூக்குவதன்றி அருவருப்புமான வோர் வேலை. ஆயினும் மிராண்டாவின் பார்வையின்கீழ் செய்வதால் எனக்குப் பாரமும் அருவருப்புந் தோன்றவில்லை. உயிர்ச்சுவையற்ற இந்த வேலையிலும் எனக்கு மகிழ்ச்சி உண்டாகும்படிசெய்கின்றாள் - என்பது பொருள்.

(5) முரட்டுக்குணத்தால் ப்ராஸ்ப்பீரோ இந்தக் கடியவேலையைத் தனக்கு அமைத்தனன் என்று அவனை வெறு

கொணர்ந்து அடுக்கிவிடவேண்டும்; நான் பணி இயற்றுவதைக் காணுங்கால் இனிய வென் தலைவி கண்ணீர் வடித்து, இத்துணை இழிவிற்கு இத்தகைச் செய்வோன் என்றும் வாய்த்ததில்லை. எனச் செப்புவாள் (6). மறந்தேன்: எனினும், இனிய இந்நினைவுகள் என் உழைப்பினை ஆற்றிவைக்கவும் வைக்கின்றன, (7). எத்துணைக்கெத்துணை நானிதனைச் செய்வதிற் றாழ்கின்றேனோ அத்துணைக்கத்துணை என் வேலையில் விரைந்தவனாகின்றேன் (8).

[மிராண்டா வருகின்றாள். இவர்களுக்குப் புலப்படாமல் ப்ராஸ்ப்பீரோவும் சிறிது தூரத்தில் வருகின்றான்]

மிராண்டா:—ஐயோ, இதோ வேண்டிக்கொள்கின்றேன், இத்துணைக் கடுமையாய் நீ உழைக்க வேண்டா. நீ அடுக்கவேண்டுமென்று கட்டளை இட்டுள்ள அக்கட்டைகளை இடிதான் வீழ்ந்து எரித்திருந்தா லாகாதோ! அதனைக் கீழே வைத்துவிட்டு இளைப்பாற்றிக்கொள். உன்னைக் களைப்படையச் செய்ததற்காக இது எரியும்போது கண்ணீர் வடித்து அழும் (9). என் தந்தை படிப்பதில் வலிந்திருக்கின்றான்; வேண்டிக்கொள்கின்றேன், இப்பொழுது நீ இளைப்பாற்றிக்கொள். இன்னும் மூன்று மணிநேரம் அவனுக்கு அஞ்சவேண்டுவதில்லை.

பர்டினண்ட்:—ஆ! அருமையிற் சிறந்த வென் தலைவியே, யான் வருந்தி முயலநிற்பதை முடிப்பதன்முன் கதிரோன் சாய்ந்துவிடுவான் (10).

மிராண்டா:—நீ உட்காருவாயாயின் அக் காலம் கட்டைகளை நான் சுமந்து கொணர்வேன். தயைசெய்து அதனை என்கையிற் கொடு; அடுக்கிற்கு நானே கொண்டுசெல்கின்றேன்.

பர்டினண்ட்:—விலையிலா உயிரே, வேண்டா. பக்கத்தில் நான் சும்மா உட்கார்ந்திருக்க நீ இவ்விழிவிற்குக் கீழாவதனினும், என் தசையெல்லா மறுந்து முதுகும் ஒடியட்டும். (11).

மிராண்டா:—உனக்கு இது அடுக்குமளவு எனக்கும் அடுக்கும். மற்று, நானே அதனை அதிகமும் எளிதிற் செய்பவ ளாதலும்வேண்டும். ஏனெனில், என் விருப்பம் அதனில் உளது, நினதோ அதற்கு மாறாக இருக்கின்றது (12).

ப்ராஸ்ப்பீரோ:—(ஒரு புறமாய்). ஏழைப்புழுவே, நீ பற்றுண்டு கிடக்கின்றாய். இந்தக் காட்சியே அதனைக் காட்டும். (13).

மிராண்டா:—இளைப்புற்றுத் தோன்றுகின்றாய் நீ.

பர்டினண்ட:—இல்லை, பெருந்தகைத் தலைவி, நீ அருகிருக்குங்கால் இரவும் எனக்குப் புதிதெழும் வைகறைப் பொழுதே யாகும். (14). உன்னை யான் வேண்டிக்கொள்கின்றேன்—என் ஜபத்தினுள் அமைப்பதற்கே—உன் பேரென்ன? (15)

மிராண்டா:—மிராண்டா—ஓ எந்தாய், இதனைச்சொல்லி யான் உன் கட்டளையைக் கடந்துவிட்டேனே! (16)

பர்டினண்ட:—பராவரு மிராண்டா! வியப்பின் உச்சியே நிச்சயம் (17). உலகினிற்கு அருமையினும் அருமைவாய்ந்த அனைத்தும் ஈடாவதற்கு இயன்றனை (18). அதிகமும் மதிப்புடன் கருதிக் கன்னியர்பலர் நிரம்ப நான் கண்ணிற் கண்டுளேன்;

த்து, அவன் மகளது மென்மையை வியந்து பாராட்டுகின்றான். முருடு - வெட்டிய மரத்தின் அடிக்கட்டை.

(6) விறகுப்பொதி சுமப்பதோ மிகவும் இழிந்தவேலை, அதனைச் செய்ய அமைந்தவனாகிய நீயோ மிகவும் உயர்ந்தவன். இவ்வளவுஉயர்ந்தவன் அவ்வளவு இழிந்த வேலையைச் செய்ய இதுகாறும் நேர்ந்ததில்லையே, நீதானா இதற்கு ஆளாகவேண்டும்—என்று பரிந்து கண்ணீர் சொரிவாள்.

(7) (8) மறந்தேன்—என்பது விறகு சுமக்கின்ற தன் வேலையை. மிராண்டாவைப்பற்றி நினைக்கின்ற என்னெண்ணங்களின் இடையே என் வேலையைச் சற்றுச் செய்யாமலிருக்கின்றேனாயினும், அவ்வெண்ணங்கள் என் களைப்பை ஆற்றுகின்றனவாதலால் இளைப்புத்தீர்ந்து பிறகு முன்னிலும் விரைவுடன் என் வேலையைச் செய்யக்கூடியவனாவேன்—என்பது பொருள்.

இவ்வேலையை நான் செய்யாமல் தாமதிக்கத்தாமதிக்க அது விரைவில் செய்யப்படுவதாகின்றது--என்பது முரணுடைய வாசகம். ஆயினும் அதற்குப் பொருள் இல்லாமற் போகவில்லை. இவ்வேலையைச் செய்யாமல் சும்மாவிருக்கும்போது அழகிய அப்பெண்ணின்குணநலன்களைப்பற்றி நினைக்கின்றேன். அவ்வெண்ணங்கள் என்னுடைய களைப்பைத் தீர்க்கின்றன. ஆதலால் மீண்டும் இவ்வேலையைச் செய்ய ஆரம்பிக்கும்போது ஊக்கமும் விரைவும் மிகுந்து விரைவில் முடிக்கக்கூடியவனாவேன்--என்கின்றான். காதலின் ஊக்கத்தால் இவ்வாறு மிகைபட முரணுடன் கட்டுரைக்கின்றான் என்பதை எளிதில் நாம் உணர்ந்துகொள்ளலாம். காதலின் தர்க்கமோ கருத்திற்கு அடங்காத புதுமை வாய்ந்தது.

(9) விறகு எரியும்போது அதன் பின்புறம் வழிகின்ற தைலத்தை அது வடிக்கும் கண்ணீராகக் கூறுகின்றாள் போலும்—தற்குறிப்பேற்றவணி.

(10) நான் மிகவருந்தி முயன்றாலும் மாலைவேளைவருவதன்முன் முடிக்கஇயலாதகாரியம் இதுவாக,செய்யாமலே இருந்துவிட்டால். பின் என்னாகும்—என்பது பொருள்.

(11) என் முதுகு ஒடிந்தாலும் ஒடியட்டும், நீ இவ்விழிந்த வேலையைச் செய்வதைக் கண்டு நான் அருகில் சும்மா உட்கார்ந்திருக்கமாட்டேன்.

(12) நீ இளைப்பாற நான் இதனை விருப்பமுடன் சுமப்பேனாதலின், எனக்கிது எளிதாகத் தோன்றும்.

(13) ஏழைப் புழு என்றது, பரிவுடன் கூடிய இரக்கத்தால் அழைத்ததாம். காதலிற்கு யாவரும் புழுவைப் போல் எளிதில் ஆளாகி விடுகின்றனர் என்பது கருத்து. பற்றுண்டு கிடக்கின்றாய் - காதல் உன்னையும் பற்றிகொண்டுவிட்டது. காட்சியே - பர்டினண்டைக் காண்பதற்கு மிராண்டா தனியே வந்தது.

(14) காலையில் களைதீர்ந்து எழுவதுபோல், நீ அருகிருப்பாயாயின் களையற்ற தெளிவுடையவனாகவே நான் எப்பொழுதும் இருப்பேன். வைகறை - காலைப்பொழுது.

(15) உன்னுடைய பேர் என்னவென்று சொல்லும்படி உன்னை நான் வேண்டிக்கொள்கிறேன். நான் ஜபம் செய்யும்போது, உன்னையும் சேர்த்து ஜபம் செய்வதற்காகவே உன் பேரை அறிய நான் விரும்புகின்றேனேயன்றி வேறன்று.

(16) தன் பேரை ஒருவருக்கும் மிராண்டா சொல்லப்படாதென்று ப்ராஸ்ப்பீரோ கட்டளை யிட்டிருந்தான் போலும்.

(17) பராவரு - புகழ்வதற்கு அருமையான. மிராண்டா என்னும் சொல் லத்தீன் பாஷையின், "புகழ்தற்குரியவள்" என்று பொருள்படும். பர்டினண்ட இங்கு அந்தப் பொருளை நினைவிற்கொண்டு, "நீ புகழ்தற்கு உரியவளாயினும் அரியவளும் ஆகி இருக்கின்றாய்"—எனச் சித்திரம் பேசுகின்றான். பராவு அரு எனப்பிரித்து இவ்வகைப் பொருள் கூறுவதால் சுவை சிறக்கின்றதாயினும், முதனூலில்உள்ள 'admired Miranda' என்னும் தொடரிற்கு இப்பொருள் மாறாக இருக்கின்றது. எனினும், 'பராவரு' என்பதைப் பராவு அரு என்று பிரிக்காமல், 'புகழப்படுகின்ற' என்னும் பொருளில் எடுத்துக்கொண்டால், "நீ புகழ்வதற் குரியவளாவதன்றி என்னால் புகழவும் படுகின்றாய்"என முதனூலோடு முற்றிலும் இணங்கிய பொருளைப் பெறலாம்.

வியக்கத் தகுந்தவைகளுக்கெல்லாம் நீ சிகரம்போன்றிருக்கின்றாய்.

(18) உலகத்தில் அருமை வாய்ந்த சிறந்த பொருள்களை எல்லாம் சேர்த்து ஒரு நிறை என்று கொண்டால்,

பற்பலகால், அவர்தம் நாவின் நல்லிசை, ஊக்கம் மிக்க என் செவியினை அடிமையுட் பிணிந்துக் கொண்டிருக்கின்றது. (19) வேறுவேறு நலன்கள்பற்றி நான் வேறுவேறு மாதர்பால் விருப்பம் வைத்துளேன். எனினும், ஆன்மபூரணமாய், அவளுடைச் சீர்கெழு இலாவணியத்தினை இகலித் தோல்விகொள்ளாப் பழுது ஏதேனும் அவளில் அமையாமை என்றுமே யில்லை (20). மற்று நீ, ஆஹா நீயோ, முற்றிலும் குற்றமறச் சற்றேனும் இணையற்றுச் சிருஷ்டியி னெவ்வொன்றினின்றும் உத்தமமானதெல்லாங்கொண்டு படைக்கப் பெற்றிருக்கின்றாய்.

மிராண்டா:—என்பாலா ரொருவரையும் நான் அறியேன் (21). கண்ணாடிநின்று எனதே யல்லால் மாதொருத்தியின் முகம் யான் நினைக்ககில்லேன். நான் ஆடவரென்று அழைக்கலாம் வகைதனில், நல்லவென் நண்ப, நின்னினும என்னருமைத் தந்தைதன்னினும் அதிகம் யான் பார்த்ததில்லை (22). அகலிடத்தில் வடிவங்கள் எவ்வகை என்பதுபற்றி யான் வல்லேனல்லேன் (23). ஆயினும், என் சீதனத்தின் இரத்தினமாம் என் நாணமே ஆணையாக, நீ யன்றி இவ்வுலகில் வேறோர் துணைவன் யான் வேண்டேன் (24). உன்னையேயன்றி நின்போல் ஓர் உருவந்தான் கற்பனைசெய்யவும் மாட்டாதென் மனம். மற்று, ஏதேதோ யான் பித்தாகப் பிதற்றியாங்கு என் தந்தையின் கட்டளையைக் கடக்கின்றேனே.

பர்டினண்ட்:—என் நிலையில், மிராண்டா யானோரிளவரசன்; மன்னனே என்றும் நினைக்கின்றேன்—அப்படிக் கன்மையே என் விருப்பம் (25). என் வாயினை ஈக் கதுவ விடுவதனினும் அதிகம்நானிந்தக் கட்டையடிமையைப் பொறுக்கமாட்டேன் (26). என்றன் ஆன்மாவே பேசக் கேள். உன்னை யான் கண்ணுற்ற அக்கணமே எனது இதயம் உனக்கு ஊழியம்புரியப் பறந்துநாடிற்று; என்னை அதற்கடியமையாக்க அங்கே தங்கியுமிருக்கின்றது (27). நின்பொருட்டு இந்தக் கட்டைக்காரனா யிருக்கின்றேன் யான்.

மிராண்டா:—என்னைக் காதலிக்கின்றாயோ நீ?

பர்டினண்ட்:—ஓ விசும்பே, ஓ பூமியே, இவ்வொலியினிற்குக் கரியா யிருந்து, உண்மையே பேசுகின்றேனாயின் யான் விளம்புகின்ற இதனை அன்புடை நற்பயனால் முடிசூட்டுங்கள்! வெற்றுக்கேயாயின், எனக்கென விதித்துள நன்மைகளிற் சிறந்ததையும் தீமையாகத் திருப்பிவிடுங்கள் (28)! இவ்வுலகில் உள்ள மற்ற எல்லாவற்றையும் விட எல்லையனைத்தும் கடந்து நின்னைக் காதலிக்கின்றேன், கொண்டாடுகின்றேன், கண்ணியங் கூர்கின்றேன்.

மிராண்டா:—மகிழ்கின்றவொன்றிற்கு அழுகின்ற இதனால் ஓர் இழுதை யாகின்றேன் நான் (29).

ப்ராஸ்ப்பீரோ: — (ஒரு புறமாய்), அரிதினும் அரிய ஆசைகள் இரண்டு அழகுற எதிர்ப்பட்டன. இவர்களுக்கிடையே பிறப்பதன்மீது விண்ணவர் தம் அருள் சொரிந்திடுக (30).

பர்டினண்ட்:—எற்றுக்கு அழுகின்றாய் நீ?

மிராண்டா:—நான் நல்க விழைவதை நீட்டவேனும், வேண்டி வேண்டி யான் மாய்வதை ஏற்கவேனும்

அதற்கு நேர் எதிர்நிறை ஆவதற்கு நீ ஒருத்திபோதும். அத்தனையும் உனக்கு விலையாகக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளத் தகுந்தவள்—என்பது பொருள்.

(19) மாதர் பலர் பேசும் இனிமை என் செவியைக் கவர்ந்திருக்கின்றது. நானும் அவர் மொழியினைக்கேட்க ஊக்கத்துடன் அவாவியிருக்கின்றேன்-என்பது பொருள்.

(20) இலாவணியம் - வசீகரமுடைய அழகு; குணம் முதலியன. நான் பார்த்த மாதர்களின் விலாசம் எத்துணைச் சிறந்ததாயினும், அவர்கள்பால் ஏதேனும் ஒருகுறையிருந்து அவ் விலாசத்தைக் கெடுத்துவிடுவதாகவே முடிகின்றது—என்பது இவ்வாக்கியத்தின் கருத்து. குறையானது விலாசத்துடன் சண்டையிட்டு அதனைத் தோற்கடித்துவிடுகின்றது—என்று சேர்த்துக்கொள்ளவும்.

ஆன்மபூரணமாய்ப் பழுதற்றவள் ஒருத்தியுமில்லை என்று பொருள் சேரும். அல்லது, அவளிடத்திலுள்ள குறையைக் காணுவண்ணம் அவளது இலாவணியத்திலேயே மயங்கிக்கிடக்கும்படி நான் ஆன்மபூரணமாய் விருப்பம் வைத்தவள் ஒருத்தியுமில்லை, என்றும் பொருள் கொள்ளலாம். இம்மயக்கம் முதல்நூலிலும் உளது.

(21) என் பாலார் - பெண் பாலார்—ஆயினும் தன்னை வளர்த்த தாதியர் நாலவர் இருந்தனரென்பதை முன் நினைத்துச்சொன்னாள்—(அங்கம் 1. களம் 2. பக்கம் 52).

(22). பர்டினண்டைப் பார்த்த பிறகு, இவள், காலிபனை ஓர் மனிதனென்று அழைக்கக்கூட இசையவில்லை போலும்.

(23). இந்தத் தீவிற்கு அப்பால் உள்ள உலகங்களில் மனித வடிவங்கள் எவ்வா றிருக்குமென்று உணரக்கூட எனக்கு இயலவில்லை - என்பது பொருள்.

(24). சீதனம்-பெண்களுக்கு உரிமையுள்ள பொருள். தன்னுடைய பொருள்களிலெல்லாம் இரத்தினம்போல் சிறந்து விளங்குகின்ற நாணத்தின்மீது ஆணை வைத்துத் தன் கருத்தின் உண்மையைத் தெரிவிக்கின்றாள்.

(25). தன் தந்தை இறந்தாலன்றித் தான் அரசனாக இயலாதாதலின், அப்பதவியைத்தான் விரும்பவில்லை—என்கின்றான்.

(26). அரசனாகிய நான், என் வாயைக் கதுவ வருகின்ற ஈயை விலக்குவதைக்காட்டிலும் எளிதில் இவ்வடிமைத் தொழிலை விலக்கிக்கொள்ள இயலும்-என்பது பொருள். கட்டை அடிமை - மரக்கட்டைகளைச் சுமக்கவேண்டிய அடிமை வேலை.

(27). அங்கே - அவ் ஊழியத்திலே. நான் மிகவிரும்பி உன் ஊழியனாம்படி என் இதயம் என்னை உனக்குஅடிமையாக்கிவிட்டது.

(28). ஆகாயத்தையும் பூமியையும் சாட்சிவைத்துத் தன் காதலை விளம்புகின்றான். ஒலியினிற்கு - தான் இப்பொழுது சொல்வதற்கு. நான் விளம்புவது உண்மையானால் அக்காதலை மங்களமாக நல்ல முடிவிற்குக் கொண்டு வாருங்கள்; பொய்யாயின், எனக்கு நன்மையாக வர இருப்பவைகளையும் தீமையாகமாற்றிவிடுங்கள்-என்பது இதன் பொருள்.

(29) இழுதை - அறிவில்லாதவள். பர்டினண்ட் விளம்பிய காதல் நிரம்பிய வாசகங்கேட்டு மிராண்டாவின் கண்களில் ஆனந்த வெள்ளம் பெருக, "அறிவிலி, நான் மகிழ்வதற்குரிய இவ்வேளை அழுகின்றேனே"—என வியக்கின்றாள்.

(30) பிறப்பதன்மீது - இவர் சந்தித்ததால் விளைகின்ற முடிவாகிய வதுவையின்மீது - என்பது பொருள். அல்லது இவர்களுக்கிடையே பிறக்கின்ற இக்காதலின்மீது-என்றும் பொருள் கொள்ளலாம்.

(31). பொருட்டாக அழுகின்றேன், என்று முடித்துக் கொள்க. என் காதலை உனக்கு அளிக்க விழைகின்றேன், உன் காதலை எற்காவிடின் உயிர் பிழைக்கமாட்டாத நிலையில் இருக்கின்றேன்; ஆயினும், நான் உன்னைக் காதலிப்பதற்கேனும் உன்னால் காதலிக்கப்படுவதற்கேனும் தகுதியற்றவளாய் இருப்பதுபற்றி இப்பொழுது அழுகின்றேன்-என்பது பொருள்.

(32) இவ்வாறு நான், விழைவதை விளம்பத் துணியாமல் இருந்துவிடுவேனாயின், கிடைத்தற்கரிய காதலை வீண்செய்ததாகும்; அதனை அடக்க முயல்வதும் வீணாம்-என்பது பொருள்.

(33). அது-அவளுடைய காதல்-தன் காதலை ஒளிக்க முயலமுயல அது அதிகமதிகம் வெளிப்பட்டே தோன்றத் தலைப்படுகின்றது—என்பது பொருள்.

துணியாத என் தகுதியின்மையின் பொருட்டாக (31). மற்று, இதுவோ வீண்போக விட்டதாகும் (32). தன்னை யது ஒளித்துக்கொள்ளும் வகை தேடத்தேடப் பெரிதுபெரிது பருமனே காட்டு கின்றது. (33). வெள்குகின்ற யோசனையே, விலகிச்செல்! கபடமற்ற திப்பியத் தூய்மையே இனித் தூண்டுக (34). என்னை நீ மணப்பாயாயின் நான் உன்மனைவி; இல்லையேல் நின் கன்னியாச் சாவேன்(35): உன்றன் துணைவியாக நீ மறுக்கலாம்; மற்று நீ இசைந்தாலும் இசையாவிடினும், உன் வேலைக்காரியா யிருப்பேன்.

பர்டினண்ட்:—காதல்சால் மாதராய், என்னுடைத் தலைவி! என்றும் நின்றனக்கு இங்ஙனம் தாழ்மையேன் யான் (36).

மிராண்டா:—ஆயின், என் கணவனோ?

பர்டினண்ட்:—ஆம், தளைதான் விடுதலைக் கென்றும் இசைவதை யொக்குமொரு மிதயமுடன்—(37) இந்தா என் கரம்.

மிராண்டா:—என் இதயமும் உள்ளாக இதோ எனது (38). இன்னும் அரைக்கடிகை அளவுகாறும் நல்விடை கொண்டகல்க.

பர்டினண்ட்:—ஓர் ஆயிரம் ஆயிரம்! (39).

[பர்டினண்டும் மிராண்டாவும் வேறு வேறு போகின்றனர்.]

ப்ராஸ்ப்பீரோ:—அதிசயமும் அடைந்துள்ள அவரளவு நான் இதுபற்றி மதிமகிழ்த லியலாது; எனினும் இதனினுமதிகம் என் மகிழ்வு வேறு எதன் பொருட்டும் ஓங்குதற்கில்லை (40). இனி என் புத்தகத்தை நாடுவேன்; ஏனெனில், இராப்போசன வேளை வருவதன்முன் இதனிற்குரிய காரியம் நான் இன்னும் மிகச் செய்தல்வேண்டும். (41)

(34). என் தகுதியின்மையை யோசிக்கயோசிக்க, நான் விளம்ப விரும்புவதைக் கூறுதற்குக் கூசிக்கூசிப் பின்னிடுவதால், இனி யோசனையைவிட்டு, கபடமற்ற என் தூய்மைதான் தூண்டுந் துணையாக விளம்பிவிடுவேன்-என்பது கருத்து.

(35) வேறு யாரையும் மணங்கொள்ளாமல், உன்னையே உன்னியுன்னிக் கன்னியாகச் சாவேன்-என்பதுபொருள்.

(36) இங்ஙனம் தாழ்மையேன் - பர்டிநண்ட் அவள் முன் முழங்கால்படியிட்டு அவள் காதலை ஏற்கின்றான். அவள், 'வேலைக்காரி' என்றதை மறுத்துத் தன் தலைவியே என்று கொள்கின்ற குறிப்புடையது.

(37) சிறைப்பட்டோர் விடுதலைக்கு எத்துணை அவாவுவாரோ அத்துணை அவாவுடன் நான் உன் நாயகனாகின்றேன்—என்பது பொருள். இதயமுடன் உன் நாயகன் ஆவேன்—எனச் சேர்த்து முடித்துக்கொள்க.

(38) என்று மிராண்டா தன் கையையும் கொடுக்க இருவரும் கரங்களைக் கோத்துக்கொள்கின்றனர்.

(39) ஆயிரமாயிரம் நல்விடை யளிக்கின்றேன் என்று முடித்துக்கொள்க.

(40) அவர் - பர்டினண்டும் மிராண்டாவும். வேறு எதனையும்விட எனக்கு மிகிழ்ச்சி தரவல்லது இன்று இவ்விருவரும் காதல்கொண்ட இதுவேயாயினும், அக்காதலர்தாம் அடைந்திருக்கின்ற மகிழ்விற்கு எனது மகிழ்வு ஓரளவு குறைந்தே இருக்கின்றது—என்பது பொருள்.

இருவரும் காதல்கொள்வார் என்பது ப்ராஸ்ப்பீரோ எதிர்பார்த்ததே. எதிர்பாராமல் இக்காதல் அவ்விருவருக்கும் நேர்ந்ததால், அவர்கள்திறத்தில் மகிழ்ச்சியோடு அதிசயமும் கலந்திருக்கின்றது. எனின், காதலின் மகிழ்வோடு புதுமையின் வியப்பும் சேர்ந்து அவர்தம் உள்ளத்தின் உவகையை உயர்த்தி வைக்குமன்றோ.

(41) புத்தகம் - ஜாலவித்தைப் புத்தகம் - இதுபற்றி இன்னும் சில மாயங்கள் செய்யவேண்டியிருக்கின்றன—என்பது பொருள்.

முதற்களம் முற்றும்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[558-வது பக்கத் தொடர்ச்சி]

5-ம் பத்து, 6-ம் தசகம்.

அவதாரிகை:—திருக்குறுங்குடி நம்பியை நேரே அனுபவித்தார்போல்ஆழ்வார் ஒருவாறு ப்ரீதி அடைந்தாரேனும், "என் போன்ற பாவிக்கு அவனுடன் கலவை ஏற்படவில்லையே" என்ற வியாகுலத்துடன் முன் தசகத்தை முடித்தார். அவனுடன் கலந்தாலொழிய இவருடைய மனது ஆறுதலடையாது. சிற்சில கோபிமார், தம்மைத் தாமே பகவானாகப் பாவித்து அபிநயம்செய்து விளையாடிக் கிருஷ்ணனது பிரிவை ஆற்றிக்கொண்டதுபோல், ஆழ்வாரும் இத் தசகத்தில் தானே கிருஷ்ணனாகிவிட்டதாகப் பாவித்துத் தம் திருவுள்ளத்தை ஆற்றிக்கொள்கின்றார். நாயகனுடைய சேஷ்டைகளையும் பாஷைகளையும் நாயகி அநுஸரிக்கும்போது, அவனோடு வேறுபடாமல் ஒன்றாகிவிட்ட இரஸ விசேஷம் உண்டாகையாலே, ஆசுவாஸம் வர இடமுண்டு என்று ஊகிக்கவேண்டும். கிருஷ்ணனாக வேஷம் போடலாம்; ஆயினும் அவனைப்போல் நடிப்பதும் அபிநயம் செய்தலும் சாத்தியமல்லவே. வாய்வார்த்தை வரையில் கிருஷ்ண வேஷம் சுலபமே; பகவத்கீதையினின்று சில சுலோகங்களை எடுத்துக் கூறிவிடலாம், கையிலும் ஞானமுத்திரை காட்டலாம். ஆனால் ஞானத்திலும் இங்கிதசேஷ்டைகளிலும் அவனை ஒவ்வாமற்போனால் என்ன பயன்? இப்பிராட்டியின் பேச்சைக் கேட்கின்ற தாய்மார், "உன் பெண் எப்படி இருக்கின்றாள்" என்று வினவுகின்ற அயலார்க்கு, "பகவான் இவளிடத்தில் ஆவேசித்துள்ளான், இவள் வாய்வார்த்தைக்கும் செய்யுங் காரியங்களுக்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லை" என்று பதில் கூறநேரும். இன்னபடி தாயின் மொழியாகிய பாசுரங்களாலே இத்தசகம் பாடப்பெற்றிருக்கின்றது.

1-ம் பாசுரம்.

கடல்ஞாலம் செய்தேனும் யானே யென்னும்
　கடல்ஞால மாவேனும் யானே யென்னும்
கடல்ஞாலங் கொண்டேனும் யானே யென்னும்
　கடல்ஞாலங் கீண்டேனும் யானே யென்னும்
கடல்ஞால முண்டேனும் யானே யென்னும்
　கடல்ஞாலத் தீசன்வந் தேறக் கொலோ
கடல்ஞாலத் தீர்க்கி வையென் சொல்லுகேன்
　கடல்ஞாலத் தென்மகள் கற்கின் றவே.

பொழிப்புரை:—கடலோடு கூடிய ஜகத்தை ஒரு ஸகாயமும் இன்றி நானே படைத்தேன் என்பாள். இந்த உலகமெல்லாம் என்னை ஆதாரமாக உடையதே யன்றி ஸ்வதந்தரமா யிருக்கும் பதார்த்தம் ஒன்

றும் இல்லை என்பாள். இதனை நானே மகாபலியினிடத்திலிருந்து அபகரித்து அளந்துகொண்டேன் என்பாள். ஆழ்ந்து கிடந்த இவ்வுலகத்தை ஒரு ஸஹாயமும் இன்றி நானே தூக்கி எடுத்தேன், என்பாள். பிரளயத்தில் இவ்வுலகத்தை நானே உண்டு என்வயிற்றில் வைத்திருந்து இரக்ஷித்தேன் என்பாள். கடலால் சூழ்ந்த இவ்வுலகத்தில் இவள்பக்கல் பகவான் வந்து ஆவேசித்தானே! கடல்சூழ்ந்த உலகத்தி லிருப்பவர்களே, உங்களைப்போன்றவர்களுக்கு இப்பெண்ணின் வார்த்தைகள் என்னபொருள்படும், நான் அவற்றைச் சொல்லி என்ன பயன்.

2-ம் பாசுரம்

கற்குங்கல்விக் கெல்லை யிலனே யென்னும்
கற்குங்கல்வி யாவேனும் யானே யென்னும்
கற்குங்கல்வி செய்வேனும் யானே யென்னும்
கற்குங்கல்வி தீர்ப்பேனும் யானே யென்னும்
கற்குங்கல்விச் சாரமும் யானே யென்னும்
கற்குங்கல்வி நாதன்வந் தேறக் கொலோ
கற்குங்கல்வி யீர்க்கிவை யென்சொல் லுகேன்
கற்குங்கல்வி யென்மகள் காண்கின் றவே.

பொழிப்புரை:—நான் கற்கும் கல்விக்கு எல்லை இல்லை என்பாள். எல்லாரும் கற்கின்ற வித்தைகளும் நானே என்பாள். அவற்றை நானே உண்டாக்கினேன் என்பாள். அவற்றின் தாத்பரிய நிர்ணயம் நானே செய்வேன் என்பாள். வித்தைகளின் ஸாரமும் நானே என்பாள். ஸர்வ கலைகளுக்கும் ஈசுவரன் வந்து இவளிடத்தில் ஆவேசித்தானே. வித்தைகளைக் கற்கின்ற உங்களுக்கு, இப்போது என் மகள் கற்றுக்காண்கின்றவைகளின் பொருளை என்னென்று சொல்லுவேன்.

3-ம் பாசுரம்.

காண்கின்ற நிலமெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற வெந்தீயெல்லாம் யானே யென்னும்
காண்கின்றவிக் காற்றெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே யென்னும்
காண்கின்ற கடல்வண்ண னேறக் கொலோ
காண்கின்ற வுலகத் தீர்க்கென் சொல்லுகேன்
காண்கின்ற வென்காரிகை செய்கின் றவே.

கருத்து:—அளவிடக்கூடாத பஞ்ச பூதங்களும் நானிட்ட வழக்கென்று சொல்லுவாள். கடல்போல் நீலநிறத்தை யுடையவன் வந்து இப்பெண்ணின்பால் ஆவேசித்தானே. அவன் நமக்குத் தெரியாதபடி புகுந்து என் மகளைக்கொண்டு செய்யும் சேஷ்டிதங்களை நீங்கள் பார்க்கின்றீர்களே, அதற்குமேல் என்னால் ஒன்றும் சொல்ல ஆவதில்லை.

4-ம் பாசுரம்.

செய்கின்ற கதியெல்லாம் யானே யென்னும்
செய்வா னின்றகளும் யானே யென்னும்
செய்துமுன் னிறந்தவும் யானே யென்னும்
செய்கைப்பய னுண்பேனும் யானே யென்னும்
செய்வார்களைச் செய்வேனும் யானே யென்னும்
செய்யகமலக் கண்ண னேறக் கொலோ
செய்ய வுலகத்தீர்க் கிவையென்ன சொல்லுகேன்
செய்ய கனிவா யிளமான் திறத்தே.

பதக்குறிப்புக்கள்:—கதி-கிரியை. செய்வான் நின்றகளும் - செய்யவேண்டி நிற்கின்றவைகளும். செய்ய உலத்தீர் - நட்பத்தைச் சூழ்ந்து ஆராயாமல் வஸ்துக்கள் எவ்வண்ணம் காணப்படுகின்றனவோ அவற்றை அவ்வண்ணமே உண்மை ஸ்திதியில் தெரிந்துகொள்பவர். இப்பிராட்டியின் இங்கிதம் பகவானது பல இங்கிதங்களை நடிப்பதால் அது அது எதற்கு உரியது என்று ஆழ்ந்து யோசித்தாலும் அறியக்கூடாததாகிய அவைகளைச் சாதாரண உலகத்தார் எப்படி அறியக்கூடும் என்பது தாத்பரியம்.

பொழிப்புரை:—நிகழ்காலத்தில் நடக்கும் கிரியைகளும், மேல் இனி வருவனவான கிரியைகளும் பண்டு செய்தனவும் ஆகிய கிரியாபலத்தை அநுபவிக்கக் கருதும் கர்த்தாக்களுக்கு அவ்வந்தப் பிரவர்த்திகளை நானே அமைப்பேன் என்பாள். அச்செய்கைகளின் பயனை உண்பவனும் யானே என்பாள். செய்பவர்களைச் செய்யவைப்பதும் நானே என்பாள். சிவந்த கமலம்போன்ற கண்ணன் இவள்மீது ஆவேசித்தான் போல் இருக்கின்றது. சிவந்த கனிபோன்ற வாயை உடைய இந்த வொருசிறு பெண்ணினிடத்தில் தோன்றும் செய்கைகளின் ஆழங்கண்டு அவைகளின் தத்துவத்தை உணரமாட்டாத உலகத்தீர் நான் என்ன சொல்ல இருக்கின்றது. சொன்னால்தான் உங்களுக்குத் தெரியுமோ?

குறிப்பு:—இப்பிராட்டியின் விரஹாவஸ்தையில் உதடுகள் பசந்திருக்கவேண்டுமாயினும், அவள் அபிநயிக்கின்ற வேஷத்தால் கனியெனச் சிவந்து கலவை இரசத்தில் அகப்பட்டனபோல் காண்கின்றன, என்பது திருவுள்ளம்.

5-ம் பாசுரம்.

திறம்பாமல் மண்காக்கின்றேன் யானே யென்னும்
திறம்பாமல் மலையெடுத் தேனே யென்னும்
திறம்பாம லசுரரைக்கொன் றேனே யென்னும்
திறங்காட்டியன்றைவரைக் காத்தேனேயென்னும்
திறம்பாமல் கடல்கடைந் தேனே யென்னும்
திறம்பாத கடல்வண்ண னேறக் கொலோ
திறம்பாத வுலகத்தீர்க் கென்சொல் லுகேன்
திறம்பா தென்திரு மகளெய் தினவே.

பொழிப்புரை:—தப்பாமல் உலகங்களை நானே காக்கின்றேன் என்பாள். தவறாமல் கோவர்த்தன மலையை நானே எடுத்தேன் என்பாள். அசுரர்களில் ஒருவனும் மீளாமல் கொன்றேனே என்பாள். பகலை இரவாக்கியும் அர்ச்சுனனைச் சிவபூசைக்கு ஏவியும் அந்த அர்ச்சுனனை வியாஜமாக இட்டுப் பகவத்கீதையை உலகத்திற்கு உபதேசித்தும், இவைபோன்ற இன்னும் பல வகைகளில் என்னுடைய திறமையைக் காட்டிப் பாண்டவர்களைக் காத்தேனே என்பாள். கடல்கடைந்தது நானே என்பாள். என்மகள் என்னசெய்கின்றாளென்பதைத் தெரிந்துகொள்ள இச்சைப்படுகின்ற உங்களுக்கு நான் என்ன சொல்லக்கூடும். பகவான் இப்பெண்ணினிடத்து ஆவேசித்தார் போலும்.

தமிழ்ப் பாடம் 80.

அஷ்ட பிரபந்தம்—திருவேங்கடமாலை

[560-வது பக்கத் தொடர்ச்சி]

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குக் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே—தாவுகடல்
வேவவிலங் கைக்கொண்டார்வீடணனைவைத்தொ
சாவவிலங் கைக்கொண்டார் சார்பு. 10.[ழிந்தார்

பதப்பிரிவு:—வாவு கவின் மந்தி நுகர் மா கனிக்கு கற்பகத்தின் மேவு கவி கை நீட்டும் வேங்கடமே தாவு கடல் வேவ இலங்கைக்கு ஒள் தார் வீடணனை வைத்து ஒழிந்தார் சாவ வில் அம் கை கொண்டார் சார்பு.

பதவுரை:—வாவு - தாவுகின்ற, கவின் - அழகிய, மந்தி - பெண்குரங்கு, நுகர் - தின்கின்ற, மாங்கனிக்கு - மாம்பழத்திற்கு, கற்பகத்தின்-கற்பகவிருக்ஷத்தில், மேவு - அமர்ந்த, கவி - குரங்கானது, கை - தனது கையை, நீட்டும்-நீட்டுதற்குரிய, வேங்கடமே-வேங்கடமலைதான்,

தாவு - அலைகள் தாவுகின்ற, கடல் - கடலானது, வேவ-வேகும்படியும்; ஒள் - பிரகாசம் பொருந்திய, தார் - மாலையை அணிந்த, வீடணனை-விபீஷணனை, இலங்கைக்கு - இலங்கைக்கு, வைத்து - அரசனாக வைத்து, ஒழிந்தார் - மற்ற அரக்கர்கள் அனைவரும், சாவ - சாகும்படியும்; வில் - தனது வில்லை, அம் - அழகிய, கை - கையில், கொண்டார் - ஏந்தியவரான திருமால், சார்பு - சார்ந்திருக்கும் இடம்.

விரிவுரை.—திருவேங்கட மலையிலுள்ள மாமரம் ஒன்றில் ஒரு பெண்குரங்கு உட்கார்ந்து அதன் கனியைத் தின்றுகொண்டிருக்கத் தேவருலகி லுள்ள கற்பகவிருக்ஷத்திலிருக்கும் ஆண்குரங்கொன்று,இம் மாங்கனிக்கு நாவூறி ஆசைப்பட்டுத் 'தா' வென்று கைநீட்டுமென்பது முன்னிரண்டடிகளின் கருத்து. கற்பகந் தரும் கனிகளைத் தின்றுள குரங்கும் இம்மலை மாங்கனிக்கு ஆசைப்பட்டது என்று கூறுவதால் வேங்கடத்தின் வளப்பம்காட்டப்படுகின்றது. அதுவுமன்றி வானநாட்டுச் சோலையிலிருந்து ஒரு குரங்கு இங்கிருக்கும் குரங்கைக்கேட்டுக் கைநீட்டிய தென்பதால் இம்மலையின் உயரமும் கூறப்படுகின்றது. இது வுந் தொடர்பு உயர்வுநவிற்சியணி.

சீதையைச் சிறைமீட்கச்சென்ற இராமன், அணையிடத் தடைசெய்த கடலைக் கோபித்து அம்பு எய்த கதை,"தாவுகடல் வேவ வில் அங்கைக் கொண்டார்" என்பதில் அடங்கியிருக்கின்றது. கடல் கடந்தபின் அவ்விராமன், வீடணனை வைத்து ஒழிந்தார் சாவ வில் அம் கைக் கொண்டனன்.

"வில் அம் கைக் கொண்டார்" என்பதை வேவ, சாவ, என்னும் இரண்டு சொற்களோடும் இருமுறை தனித்தனி சேர்த்துப் பொருள்கொள்ளவேண்டும்.

குறிப்பு:—வாவு கவின், நுகர் மாங்கனி, மேவு கவி தாவு கடல், என்னும் இந் நான்கு தொடர்களும் வினைத்தொகைகள். இவை விரிந்தால், வாவுகின்ற கவின், நுகர்கின்ற மாங்கனி, மேவுகின்ற கவி, தாவுகின்ற கடல்; என நிலைமொழிகள் பெயரெச்சங்களாகும். பெயரெச்சங்கள் காலம் மறைந்து பகுதியளவாய் நிலைமொழிகளாக நிற்குமாயின் அத்தொடர் வினைத்தொகைகளாம் என்பதை முன் (6 வது, வால்யூம், 370-பக்கம்) விளக்கி யிருக்கின்றோம்.

காந்தளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே—பூந்
[துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மே
னான்மடங்கா மார்வத்தார் நாடு. 11

பதப்பிரிவு:—காந்தள் இரவலர் போல் கை ஏற்ப கொன்றை கொடை வேந்தன் என பொன் சொரியும் வேங்கடமே பூ துளவின் கான் மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மேல் நால் மடங்கு ஆம் ஆர்வத்தார் நாடு.

பதவுரை:—காந்தள்-காந்தள் செடியானது, இரவலர்போல்-யாசகர்களைப்போல, கை - கைபோன்ற தன் மலரால், ஏற்ப - ஏற்றுக்கொள்ள, (அதனில்) கொன்றை - கொன்றைச்செடி, கொடை - ஈகையிற் சிறந்த, வேந்தன் என - வேந்தனைப்போல், பொன்-பொன்போன்ற தன் மலர்களை, சொரியும் - சொரிகின்ற, வேங்கடமே - வேங்கடமலைதான்,

பூ - அழகிய, துளவின் - திருத்துழாயின், கான்-வாசனையானது, மடங்கா - நீங்காத, மார்வத்தார் - மார்பை யுடையவரும்,

காண - தன்னைக் காண்பதற்கு, விரும்பினர்மேல்-விரும்பினவர்களிடத்தில்,நால்-நான்கு, மடங்குஆம்-மடங்காக, ஆர்வத்தார் - அன்புடையவரும் ஆகிய திருமாலினது,

நாடு - நாடாகும்.

விரிவுரை:—காந்தள்மலர் கைபோன்று இருக்கும். அதனைக் கவிகள் கைக்கு உவமையாகச் சொல்வர். முன் நளவெண்பாவில், (வால்யூம் 5. பக்கம் 524) "கைம்மலரைக் காந்தளென (வண்டுகள்) பாய்தலுமே, வேர்த்தாளைக் காண் என்றான்" எனக் காந்தள் மலர் கையிற்கு உவமையா யிருப்பதுபற்றி வந்துள மயக்கவணியும் இதற்கு உதாரணம். கொன்றைமலர் மஞ்சள்நிறமுடன் பொன்நாணயம்போல் இருக்கும். காந்தள்மலர் கைபோன்று மலர்ந்திருப்பதும், அதற் கருகிலுள்ள கொன்றைச்செடியிலிருந்து மலர்கள் அதனுள் உதிர்வதும் ஆகிய இந்த நிகழ்ச்சிக்கு, ஏற்ற யாசகனது கையில் அரசன் பொன்சொரிவதை உவமையாகக் கூறுகின்றார். இது முன்னிரண் டடிகளின் கருத்து.

"காண விரும்பினர்மேல் நான் மடங்காம் ஆர்வத்தார்" என்னுமிவ் வருமை வாசகம் திருமாலினது அருளின் திறத்தை அழகாகக் கூறுகின்றது. அவர் மீது நாம் ஒருபங்கு பக்திவைத்தால் அவர் நம்மீது அதற்கு நான்குபங்கு அருள் வைக்கின்றார். நாம் அவரைச் சேரவேண்டுமென்று எவ்வளவு ஆசை வைக்கின்றோமோ அதற்கு நான்குமடங்கு ஆசை அவரும் நம்மைச் சேரவேண்டுமென்று கொள்கின்றார்.

நாகத்தின் மேற்குறவர் நன்கெறிந்த மாணிக்க
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே—மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து
காத்தாண்ட மண்டலத்தார் காப்பு. 12.

பதப்பிரிவு:—நாகத்தின்மேல் குறவர்நன்கு எறிந்த மாணிக்கம் மேகத்தின் மின் புரையும் வேங்கடமே மாகத்தின் மாத்தாண்டன் மண்டலத்தார் வாய் உண்டு உமிழ்ந்து அளந்து காத்து ஆண்ட மண் தலத்தார் காப்பு.

பதவுரை:—நாகத்தின்மேல் - யானையின்மீது, குறவர் - குறவர், நன்கு - நன்றாக, எறிந்த - எறிந்த; மாணிக்கம்-மாணிக்கக்கற்கள், மேகத்தின்-மேகத்தில் தோன்றும், மின்-மின்னலை, புரையும்-ஒக்கும், வேங்கடமே - வேங்கடமலைதான்,

மா - பெரிய, கத்தின்-ஆகாயத்தில் உள்ள, மாத்தாண்டன் - சூரியனது, மண்டலத்தார் - மண்டலத்திலிருப்பவரும், வாய் - வாயால், உண்டு - (யுகப்பிரளய காலத்தில்) உண்டும், உமிழ்ந்து - (பிறகு) வெளிப்படுத்தியும், அளந்து - (மாவலியினிடமிருந்து) அளந்துகொண்டும், காத்து - (ஆதிசேடனாக) தாங்கியும்; ஆண்ட - (இராமனாக) ஆளவும் செய்த, மண்தலத்தார்-பூமியை உடையவரும் ஆன திருமாலினது, காப்பு - காக்குமிடம் ஆகும்.

விரிவுரை:—மேகம்போன்ற யானையைத் தினைப்புனத்திலிருந்து ஓட்டுவதற்குக் குறவர், கையிலகப்படுகின்ற மாணிக்கங்களை விட்டெறிய, அது யானையின் மேற் போய்ப் பட்டதும், மேகத்தில் மின்னல் தோன்றுவதுபோ லிருக்கும் என்பது முதலிரண்டடிகளின் கருத்து.

திருமால் உலகத்தை எத்தனைவகையில் இரக்ஷிக்கின்றார் என்பதைக் கவி பின்னிரண்டடிகளில் விளக்குகின்றார். கம்பராமாயணத்தில் இக்கருத்து அடங்கிய அழகான செய்யுள் ஒன்று இருக்கின்றது. "திருமகள் நிலமகள் என்னும் உன்னிரு தேவிகளில் நீ பின்னவளையே பெரிதும் பாராட்டுகின்றாய்" என்று விராதன் இராமனைத் துதிக்கின்றசெய்யுளாகிய அது பின் வருமாறு:—

அரவாகிச் சுமத்தியா லயிலெயிற்றி னேந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியா லோரடியா லொளித்தியால்
திருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறாளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின்வைகுவாள்.

"அழகிய பூமிதேவியை நீ ஆதிசேஷனாகத் தலையில் வைத்துத் தாங்குகின்றாய், வராகமாக நீ உன் கூரிய கொம்பில் ஏந்தி அவளை முகத்தோடு சேர்த்துக் கொள்கின்றாய், பிரளய காலத்தில் அவளை ஒரே வாயாக விழுங்குகின்றாய்; திரிவிக்கிரமனாக ஒரு பாதத்தில் மறைத்துவிடுகின்றாய். இப்படி நீ இவளைக் கொண்டாடுவதை, வாசனைபொருந்திய துளசிமாலை அசைகின்ற உன் மார்பில் தங்கியிருக்கும் திருமகள் அறிந்தால் உன்னோடு கோபித்து ஊடல் கொள்ளமாட்டாளோ" என்பது இச்செய்யுளின் பொருள்.

குறிப்பு:—கம், என்னும் சொல்லிற்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளில் ஆகாயம் என்பது ஒன்று. கம், என்பது மகர மெய்யை ஈற்றில் உடைய சொல் ஆதலால் அது இல் என்னும் ஏழாம்வேற்றுமை உருபு ஏற்கும்போது 'அத்து' என்னும் சாரியை பெற்றது. காம், மரம் என்பனபோல் ம் என்னும் எழுத்தை இறுதியில் உடைய சொற்கள் எல்லாம், வேற்றுமை உருபோடு நேராகச் சேரமுடியாதென்றும் சாரியை வரவேண்டுமென்பதையும் முன் இவ் விதழ்களில் பல விடங்களில் விளக்கி யிருக்கின்றோம். கம் + இல் என்பது இங்கு, கத்தில், என்று ஆயிற்று. மா, என்பதற்குப் பெரிய என்பது பொருள். ஆதலால் மாகத்தில், என்பது 'பெரிய ஆகாயத்தில்' என அர்த்தமாயிற்று. மார்த்தாண்டன், என்பது சூரியனது பேர்களில் ஒன்று.

இலக்கணம்.

சென்றவாரம் சொன்ன நான்கு வகைகளில் முதல் வகையை எடுத்துக் கொள்வோம்—அதாவது, நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருமானால் அவ்வெழுத்துக்கள் எவ்வாறு புணருமென்பது.

நிலைமொழியிறுதியில் நிற்பது எந்த மெய்யெழுத்தாயிருந்தாலும், வருமொழிமுதலில் வருவது எந்த உயிரெழுத்தானாலும் நிலைமொழியும் வருமொழியுஞ் சேர்ந்து ஆகின்ற தொடர் என்ன தொடரானாலும், அந்த இறுதிமெய்யும் இந்த முதல்உயிரும் பெரும்பாலும் ஒன்றாகச் சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகிவிடும். இது பொதுவிதி.

உதாரணம்:—

காந்தள் + இரவலர் = காந்தளிரவலர். வேந்தன் + என = வேந்தனென. வேல் + ஒடித்தான் = வேலொடித்தான். அரசன் + அமைச்சர் = அரசனமைச்சர். கூழ் + இனிமை — கூழினிமை.

இப்படி நிலைமொழி யிறுதியிலுள்ள மெய்யும் வருமொழி முதலில் உள்ள உயிரும் ஒன்று சேர்ந்து உயிர்மெய்யாகிவிடுவதால், இந்தப்புணர்ச்சி விகாரப் புணர்ச்சி அன்று. தோன்றல் திரிதல் கெடுதல் ஆகிய மூன்றினில் ஏதாவதொன்று நேர்ந்தால்தானே விகாரமாகும். காண் + என்றான் = காணென்றான், என்று ஆகும்போது, ஒரு எழுத்தும் புதியதாகத் தோன்றவில்லை, ஒரு எழுத்தும் வேறு எழுத்தாகத் திரியவில்லை, ஒரு எழுத்தும் இல்லாதுபோய்க் கெடவுமில்லை. காண், என்னும் நிலைமொழி ஈற்றில் உள்ள ண் என்னும் மெய்யெழுத்து, ணெ என்று ஆயிற்றே, ஆகையால் திரிதல்விகாரமன்றோ என்று ஒன்றும் சந்தேகப்படவேண்டா. அப்படியே, என்றான், என்னும் வருமொழிமுதலில் இருந்த எ என்னும் உயிரெழுத்தைக் காணவில்லையே, ஆகையால் கெடுதல்விகாரமன்றோ என்றும் எண்ணவேண்டா. அந்த எகர உயிர்தான், இந்த ணகர மெய்யின்மேல் ஏறி ணெ என்ற உயிர்மெய்க்கு ஒலியா யிருக்கின்றது ணெ என்பதில், ண் என்னும் மெய்யினொலியும், எ என்னும் உயிரினொலியும் இரண்டும் இருக்கின்றன. ஒலியைத்தான் பார்க்கவேண்டும்; அவ்வொலியின் வடிவாகிய எழுத்தைப் பார்க்கப்படாது. ஆகையால் இவ்விதம், மெய்யும் உயிரும் உயிர்மெய்யாகும்படி புணர்கின்ற புணர்ச்சியெல்லாம் இயல்புப் புணர்ச்சியேயன்றி விகாரப்புணர்ச்சி ஆகா.

கலித்தொகை

[562-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக்கலி 19

தலைவனால் பிரிவு உணர்த்தப்பட்ட தலைவி தானும் அவனுடன் செல்ல விரும்பினாள். அதற்கவன் காட்டினது கடுமையையும் அவளது மென்மையையும் எடுத்துக்கூறி இணங்கானாயினான். பின்னுமவள், ஆயுளின் சிறுமையையும் இளமையின் அருமையையும் எடுத்துக் கூறித் தன்னை அவன் உடன்கொண்டு போகும்படி வற்புறுத்திக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலிற்
றணிவில்வெங் கோடைக்குத் தண்ணயந் தணிகொள்ளும்
பிணிதெற லுயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறன்மலை வெம்ப மண்பகத்
துணிகயந் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்

கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநா ளும்மாகத்
தளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ!

ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்நீ யுணல்வேட்பி
னாறுநீ ரிலவென வறனோக்கிக் கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன விளமைநு நெஞ்சென்னுந்
தேறுநீ ருடையேன்யான் தெருமந்தீங் கொழிவலோ!

மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றாங்கு
மாணிழ லிலவாண்டை மரமெனக் கூறுவீர்!
நீணிழற் றளிர்போல நிறனூழ்த்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டியான் றவிர்தலைச் சூழ்வலோ!

எனவாங்கு

அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே.

(தரவு)

(வரி 1 - 6) பல்வளம் - பல உணவுகளையும், பகர்பு ஊட்டும் - கொடுத்து (உயிர்களை) உண்பிக்கும், பயன் நிலம் பைது அற - விளைவினைத் தரும் நிலம் ஈரம் அறும்படி, செல்கதிர் ஞாயிறு - (ஆகாய வீதியிற்) செல்கின்ற கதிர்களையுடைய சூரியன், செயிர் சினம் - தனது மிகுந்த கோபமாகிய அனலை, சொரிதலில் - வீசுகின்றதால், தணிவு இல் வெங்கோடைக்கு - தணிவில்லாத வெய்ய கோடைக் காலத்திற்கு, தண் நயந்து அணி கொள்ளும் - (அதனிடத்துள்ள) குளிர்ச்சியை விரும்பிக் கூட்டமாகச் சேர்கின்ற, பிணி தெறல் உயக்கத்த - பசிநோய் சுடுதலையுடைய வருத்தத்தை உடையனவாகிய, பெருங்களிற்று இனம் தாங்கு - பெரிய யானைகளின் கூட்டத்தைத் தாங்குகின்ற, மணி திகழ் விறல் மலை - மணிகள் விளங்குகின்ற பெருமை பொருந்திய மலையானது, வெம்ப - கொதிக்கவும், மண்பக - தரை வெடிக்கவும், துணி கயம் - தெளிந்த நீருள்ள குளங்கள், துகள் பட்ட-பொடிபட்ட, தூங்கு அழல்-(நாற்றிசையும்) பரவும் அழலையுடைய, வெஞ்சுரம் - காட்டை,

(தாழிசை)

(வரி. 7 - 10) கிளிபுரை கிளவியாய் - கிளியினது மொழியைப்போன்ற மொழியினை உடையாய், காடு - காடுகள், தளி உறுபு அறியா - மழைத்துளிகள் விழுதலை அறியா ஆதலால், நின் அடிக்கு எளியவோ - (அக்காடுகள்) நின்அடிக்குப் போதற்கு எளியவாயிருக்குமோ? என கூறுவீர் - என்று கூறுகின்றவரே, வளியினும் - காற்றைக்காட்டிலும், வரை நில்லா - ஒரு நிலையில் நில்லாத, வாழு நாள் - என் வாழ்நாள், நும் ஆகத்து அளி என - உமது மார்பு (செய்யும்) அன்பாக, உடையேன் யான் - கொண்டவளாய நான், ஓ அவலம் கொண்டு அழிவல் - ஐயோ, (நீர் பிரியின்) துன்பத்தால் இறப்பேன்.

தலைவன் மார்பு செய்யும் அன்பையே தலைவி தனது வாழ்நாளாகக் கூறுகின்றாள்.

(வரி. 11 - 14) ஊறுநீர் - தன்னிடத்து ஊறுகின்ற நீர், அமிழ்து எய்க்கும் - அமிர்தத்தை ஒத்த, எயிற்றாய் - பற்களையுடையவளே, நீ உணல் வேட்பின் - நீ காட்டிலே நீருண்டலை விரும்பினால், ஆறு நீர் இல என - (அங்குள்ள) ஆறுகள் நீர் இல்லாதவை என்று, அறன் நோக்கி கூறுவீர் - அன்பினாற் கூறுகின்றவரே, யாறு நீர் கழிந்தன்ன இளமை - ஆற்று நீர் (விரைவிற்) கழிந்தாற் போன்ற எனது இளமை, நும் நெஞ்சு என்னும் - உமது நெஞ்சு என்று சொல்லப்படும், தேறு நீர் உடையேன் யான் - நம்பத் தகுந்த தன்மையாகக் கொண்டவளாய நான், தெருமந்து - (மனம்) கலங்கி, ஈங்கு - இவ்விடத்தில், ஓ அழிவல் - ஐயோ நீர் பிரியின் இறப்பேன்.

அறன் - அன்பு—‘அறத்தினுள் அன்பு நீ’ என்பது பரிபாடல் (3). கழிந்த ஆற்றுநீர் போலக் கழிந்த இளமையும் மீண்டும் பெறமுடியாதாகலின் ‘யாறுநீர் கழிந்தன்ன இளமை’ என்றார்.

(வரி. 15 - 18) மாண் எழில் - மாட்சிமைப்பட்ட அழகினையுடைய, வேய் வென்ற தோளாய் - மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவளே, நீ வரில் - நீ காட்டிடத்தே வருவாயானால், ஆண்டை மரம் - அவ்விடத்தில் உள்ள மரங்கள், தாங்கும் - நின் இளைப்பை ஆற்றுதற்கு உரிய, மாண் நிழல் இல - மாட்சிமைப்பட்ட நிழலையுடையன இல்லை, என கூறுவீர் - என்று சொல்லுகின்றவரே, நீள் நிழல் - மிகுந்த நிழலிலுள்ள, தளிர் போல - தளிர் (வெளுத்தலைப்) போல, நிறன் ஊழ்த்தல் - (நீர் நீங்கிப் பிரிந்தால் எனது) நிறம் அழிதலை, அறிவேன் யான் - அறிந்தவளாய நான், நும் தாள் நிழல் கைவிட்டு - உம்முடைய திருவடி நிழலை நீங்கி, தவிர்தலை சூழ்வலோ-இங்கே இருத்தலை (என் மனத்தாலும்) நினைப்பேனோ?

(தனிச்சொல்)

என - என்று யான் கூறவும், ஆங்கு - அசை.

(சுரிதகம்)

(வரி. 20 - 23) காடு - அக்காடுகள், அணை அரும் வெம்மைய - நீ அணைதற்கரிய வெம்மையையுடையன, என கூறுவீர் - என்று கூறுகின்றவரே, கணை கழி கல்லாத - (எய்த) அம்புகள் செல்லமுடியாதபடி, கல் பிறங்கு ஆரிடை - கற்கள் மிகுந்துள்ள கடத்தற்கரிய வழியிலே, பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர் - பருத்த கழுத்தினையுடைய அழகிய ஆண்புலியின் பின், பிணையும் காணிரோ - (நீங்காமல் திரிகின்ற) பெண் புலியும் கண்டிருக்கின்றீரோ, அவை பிரியுமோ - அவை (ஒன்றையொன்று) பிரிதலுண்டோ?

எங்ஙனம் ஆண்புலி பெண்புலியைப் பிரியாதோ அவ்வாறே நீர் எம்மையும் பிரியாமல் உடன் கூட்டிச் செல்லுதல் வேண்டும் என்பது கருத்து.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[563-வது பக்கத் தொடர்ச்சி]

பூ

1753 பூகங் கமுகுஞ் சபையுந் திரட்சியும்.
1754 பூக்சங் கமுகு மூரு நாடுங்
கூந்தற் கமுகுங் கூறினர் புலவர்.
1755 பூங்கற்று வனப்பும் பூதமும் புகல்வர்.
1756 பூசை யர்ச்சனையும் பூனையு மாகும்.
1757 பூட்கை சிங்கமு[1] மேற்கோளு மாகும்.
1758 பூதஞ் சிவனும் புனிதமும் பூதமும்
பரணியு மிறந்த காலமு முள்ளானும்
ஆலுமைம் பூதமு மறைந்தனர் புலவர்.
1759 பூதிதுர்க் கந்தமுஞ் செல்வமும் புவியும்
நரகமு முடம்பும் பூழ்தியுங் கொடுமையும்
நீறுந் தசையு மூழலு மாகும்.
1760 பூதிகம் பூமியுந் தேகமும் புகல்வர்.
1761 பூப்புப் பொலிவும் பூத்தலு மாகும்.
1762 பூபாலர் வேந்தரும் [2]வேளாளரு மாகும்.
1763 பூமரம் பூத்திடு மரத்தின் பெயரும்
அறிகுறி யுமென வறைந்தனர் புலவர்.
1764 பூமன் நான்முகனுஞ் செவ்வாயுமாம்.
1765 பூருவம் பழமையு முன்புங் கிழக்கும்.
1766 பூவை காயாவுங் கயிறுங் கிளியும்
நாகண வாயு நவின்றனர் புலவர்.
1767 பூழ்க்கை யானையும் யாளியுந் தோலும்.
1768 பூழிலே யகிலும் நீலப் பெயரும்.
1769 பூழி புழுதியுஞ் சேறு மாகும்.
1770 பூழியன் வழுதியுஞ் சேரனு மாகும்.
1771 பூவே மலரு மழகுங் கூர்மையும்
விளைநிலமும் பொலிவும் பூமியுங் கணவனும்
தாமரையுங் கண்ணிற் சார்ந்த பூவும்
பிறப்பு மெனவே பேசினர் புலவர்.

பெ

1772 பெட்டல் விரும்பலும் வேண்டலு மாகும்.
1773 பெட்பு மேன்மையும் விருப்பமு மாகும்.
1774 பெண்ணை யோராறும் பனையு மனுடமும்.
1775 பெண்டிர் அலியும் பெண்ணு மாகும்.

பே

1776 பேடு பேடியு மன்மத னுடலும்
பறவைப் பேடு மூரு மாகும்.
1777 பேணல் மிகுத்தலும் பேணிக் கொள்ளலும்.
1778 பேதை குருடனும் பெண்ணு மூடனும்.
1779 பேதி பேதமு மிரதமு மாகும்.
1780 பேயே பேயு மில்லை யெனலுமாம்.
1781 பேராள னென்பதோர் நாளு மிகுத்தோனும்.
1782 பேரே புகழு நாமமும் பெருமையும்.

பை

1783 பைதல் [3]துன்பமு மற்பமு மாகும்.
1784 பைங்கூழ் பயிரு நோயு மாகும்.
1785 பைத்த லுருத்தலும் பசத்தலு மாகும்.
1786 பைம்பொன் பசும்பொன்னு மேருவு மாகும்.
1787 பையங் கூடையுங் கோரையு மாகும்.
1788 பையுள் சிறுமையு நோயு மாகும்.
1789 பைமெத் தெனவும் பையும் பட்டமும்
அழகும் பசுமையு மாகு மென்பர்.

பொ

1790 பொக்கம் பொய்யும் மிகுதியு மாகும்.
1791 பொகுட்டுத் தாமரைப் பூவின் கொட்டையும்
நீரி லெழுந்த குமிழியும் பொருப்பும்.
1792 பொங்கல் கொதித்தலு மிகுதியு மாகும்.
1793 பொங்கர் சோலையும் பொருப்பு மரக்கோடும்
இலவ மரமு மிசைத்தனர் புலவர்.
1794 பொச்சாப்பு மறவியுந் தீதும் புகல்வர்.
1795 பொதுளல் செறித்தலுந் தழைத்தலு மாகும்.
1796 பொதிர்ப்பு வெடித்தலு மெறிதலும் பொதிர்வும்.
1797 பொத்தகங் கோசமுஞ் சித்திரப் புடவையும்
பொத்த கமும்பொது மையும் புகல்வர்.
1798 பொதியே மூடையும் பொதியு மாகும்.
1799 பொம்மல் பொலிவுஞ் சோறு மிகுதியும்
பொய்யு மெனவே புகன்றனர் புலவர்.
1800 பொய்மரப் பொந்தும் பொக்கமும் பொய்யும்.
1801 பொய்த்தல் பொய்த்தலுங் கணிகை விளையாட்டும்.
1802 பொருள்சொற் பொருளும் மதலையும் பொன்னும்
பண்புந் தலைமை யும்பல் பண்டமும்
வாய்மை யுமென வழங்க லாகும்.
1803 பொருநர் போர்த்தலைவருங் கூத்தரும் பாணரும்
புரவலரும் வீரரும் புகன்றனர் புலவர்.
1804 பொழிலே புவியும் பெருமையுஞ் சோலையும்.
1805 பொறை தறுகல்லும் பூமியுங் கருப்பமும்
பாரமும் பொறையும் மலையு மாகும்.
1806 பொறிபுள்ளி மாவும் வரியுமைம் புலனும்
இயந்திர முந்திரு வுந்தீப் பொறியும்
இலாஞ்சினையுந் தோணியுஞ் செல்வமு மறிவும்
எழுத்து மெனவே யியம்பினர் புலவர்.
1807 பொற்பு வனப்பும் பொலிவு மொப்பனையும்.
1808 பொற்றை மலையுந் தூறு மாகும்.
1809 பொன் பஞ்சலோகமும் வனப்பும் திருவும்
பொலிவும் வியாழமும் பொன்னும் பானுவும்
இரும்பு மெனவே யியம்ப லாகும்.

போ

1810 போகி யிந்திரனும் பாம்பு மாகும்.
1811 போகில் புட்பொதுவும் பூவி னரும்பும்
பொகுட்டுங் கொப்பூழும் புகன்றனர் புலவர்.
1812 போக லுயர்வு நீளமும் போதலும்.
1813 போக்கு போதலுங் குற்றமும் வழியும்
இளமரமு மெனவே யியம்பினர் புலவர்.
1814 போசர் காவியும் வினைக்குடை யாரும்.
1815 போதகம் மாவின்கன்று மப்பமும்
யானைக்கன்று ஞானமு மிளமையும்
இளம்பனை யுமென வியம்பினர் புலவர்.
1816 போதம் யானைக் கன்றும் ஞானமும்
அறிவு நாவாயு மறைந்தனர் புலவர்.
1817 போந்தை யிளம்பனையு [4]மனுட நாளும்
1818 போந்து பெருச்சாளியும் பல்லியு மெலியும்
பனையு மெனவே பகர்ந்தனர் புலவர்.
1819 போர்வை தோலு மீக்கோளும் போர்த்தலும்.
1820 போர்நெற் போருஞ் சமருஞ் சதையமும்.
1821 போலே யொப்பு மசைச்சொல்லு மாகும்.
1822 போற்றல் புகழ்தலு மொப்பலு மாகும்.

பௌ

1823 பௌவம் பரவையுங் கணுவுங் குமிழியும்
குருவுந் தலையுவா வுமெனக் கூறும்.

(பிரதி) 1. ஞ்சனியனு. 2. ஈவோரு. 3. பொற்கென்றலு.

(பிரதி) 4. யானையு மாகும்.

அமீல்

[562-வது பக்கத் தொடர்ச்சி]

சற்று ஏறக்குறைய முப்பத்தைந்துவருட காலம் வரையிலும் சிந்தனைகளான சிகரங்களினின்று வீசிய காற்றைப் பிரதிபலிக்கும் கண்ணாடிபோல் விளங்கிய அமீலினுடைய மனத்தினின்று ததும்பிய எண்ணங்களில் இன்னுஞ் சிலவற்றைக் கீழே வரைவோம்.

உண்மையில், ஆராய்ந்து அறியவேண்டிய விஷயம் ஒன்றேயுளது; அது யாதெனின், மனோவமைப்பையும் போக்கையும், கருத்துக்களின் எழுச்சி வளர்ச்சி மாறுதல்களையும் முடிபையும் பற்றித் தெளிதலேயாம்.

கடவுளும் நொந்துகொள்வாராயின், அவரை நாம் விநாடிதோறும் நிராகரித்துத் தூற்றித் துர்நடத்தைகளில் நம்முடைய வாணாட்களைச் செலுத்திவருதலே அன்னதற்குக் காரணமா யிருக்கவேண்டும். அறியாமை என்ற வில்லில் பழிமொழிகளாகிய அம்புகளைப் பாபிகள் தொடுத்து எய்யும் குறியாக நிற்கின்றார் கடவுள். மாந்தரிற் பெரும்பாலரால் சிறிதேனும் உணரப்படாமல், பெரிதும் விபரீத புத்திக்கும், விதண்டவாதத்திற்கும், சற்பத்திற்கும் இலக்காவது கடவுளாகும்.

கடவுள்மீது மனதை நாம் எவ்வளவு செலுத்துகின்றோமோ, அதே அளவுடன் கடவுளும் நமக்கு அருள்புரிகின்றார்; எந்நோக்கத்துடன் கடவுளை நாம் கருதிப் பார்க்கிறோமோ, அதே நோக்கத்துடன் நம்மைக் கடவுளும் பார்த்து மதிக்கின்றார் போலும்.

தைரியம், அல்லது வீரியம் என்பது, மிடி அவதி அவதூறு நோய் மரணம் ஆகியவைகளால் உண்டாகும் பயத்தை வென்று அடக்கி உயர்தலேயாம். சிரத்தையும் நம்பிக்கையும் வீரிய வுணர்ச்சியினின்றுதான் அபிவிர்த்தியாவன. அதி உத்தம செயல்கள் வீரிய ஒளியின் பிரகாசத் தோற்றங்களாம்.

ஒவ்வொன்றும் பிம்பத்தின் பிரதிபிம்பமேயாகும்; பிம்பம் யாதெனின், மனதேயாம்.

ஒவ்வொரு மொட்டும் ஒரே முறைதான் மலர்கின்றது; ஒவ்வொரு மலரின் எழில் வனப்புக்கள் பூர்ணமாக ஒரே நிமிஷந்தான் காணப்படுகின்றது; இதுபோல், ஆன்மாவாகிய புஷ்பவனத்தில், ஒவ்வொரு உணர்ச்சியும் ஒரேமுறை அரும்பி யலர்ந்து க்ஷணப்பொழுதிற்குள் தன் உயர்வையும் பொலிவையும் தோற்றுவித்து மறைகின்றது. நள்ளிரவில் மிக்க ஜ்வலிப்புடன் ஒவ்வொரு நக்ஷத்திரமும் விண்ணின் உச்சியைக் கடந்து பாய்கின்றதாம்; இதுவேபோல், மனமாகிய ஆகாயத்தில், ஒவ்வொரு எண்ணமும் ஒரே முறைதான் உச்சஸ்தானத்தை யடைகின்றது; அச்சமயத்திற்முன், அவ் வெண்ணத்தின் ஜோதியும் மாண்பும் நம்மை உயர்த்தி ஆனந்தவசமாக்குகின்றது. எழிற் கலைஞர், அல்லது கவிஞர், அல்லது வித்தகர், எவராயினும், அவர்கள் தம்முடைய கற்பனைகளையும் உணர்ச்சிகளையும் உலகினர்க்கு அறிவுறுத்த விரும்புவார்களாயின், அவ்வெண்ணங்கள் உன்னத இடத்தை அடையும் சமயத்தைக் கவனித்து, அத்தருணத்தில் அவைகளைப் பற்றவேண்டும்; அச்சமயத்திற்குமுன் அவைகள் மங்கிய உருவங்களாகவாவது, அல்லது உருவற்ற பிரதிபிம்பங்களாகவாவது தோன்றும்; பின், அவைகளைப்பற்றிய மலினஞாபகமோ, அல்லது பயனற்ற அநுதாபமோதான் தங்கும்; அவைகள் விரிந்து உயர்ந்து பிரகாசிக்கும் தருணமே வெற்றிக்கும் சிறப்பிற்கும் ஏற்ற தருணம்போலும்.

சஞ்சல உணர்ச்சியினின்று கிளம்புகின்ற துர்ப்பல ஆவேசமே துவேஷம் என்பது.

இன்னல் இடர்களை எதிர்த்து வென்று அடக்கி அழிப்பதின்றியே அவைகளைப் பொருட்படுத்தாமல் புறத்தே தள்ளுவோமாயின், அவைகள் பயந்து ஓடி ஒளிந்துவிடாமல், உக்கிரத்துடன் மேன்மேற் கிளம்பி மீட்டுமீட்டும் நம்மைத் தாக்கி அழிக்கக்கூடியனவாகும் என்பதைக் கருத்துட் கொள்ளவேண்டும்.

விதிகள் கொள்கைகள் போதனைகள் ஆகிய இவைகளைவிட மிக்க சிறந்தன யாதெனின், பழக்கம் அப்பியாசம் அநுபவம், அல்லது அநுஷ்டானங்களேயாம். உயிரும்உரமும் உருவமும்பெற்றுத் திகழ்வன நடத்தைகளேயாம். ஒருவனுடைய கொள்கைகளை மாற்றிச் சீர்ப்படுத்தல் மாத்திரம் பயனில்லை; இவ்வாறு செய்தல் ஒருநூலின் பெயரை மாற்றுவதையே யொக்கும். கொள்கைகளை அநுஷ்டானங்களுக்குட்படுத்தலும், அதற்கிணங்கியபடி புதிய வாழ்க்கையுள் புகுந்து தொடர்தலுமே பிரதானமாவன; ஏனெனின், இவ்வழிதான் வாழ்க்கையின் சாரத்தைப் புகட்டி இனிக்கச்செய்வது. பல்வேறு அநுஷ்டானங்களாலும் அநுபவங்களாலும் நெய்யப்பட்ட ஆடையாம் வாழ்க்கை.

கர்மமோ அல்லது ஞானமோ, கர்மங்களிலீடுபட்டு முடித்தலோ அல்லது விசாரித்தறிதலோ, இவைகளுள் வாழ்க்கையின் இலக்ஷியமாவதற்கு உரியது யாதோ? அன்பை வளர்க்காத சாஸ்திர ஆராய்ச்சியும் விவேகமும் கீழ்மையே. புத்திப்பெருக்கம், அல்லது விவேக வளர்ச்சிமாத்திரம் வெப்பமற்றவோர் ஒளியை ஒத்ததாகும். நித்திய வாழ்க்கைக்கு மூலாதாரமும் துணையுமாவது அன்பேயாம். பரிபூரண அன்பினால் விவேகமானது வளர்ந்து வியாபித்துப் பொலிவுறுகின்றது; எனினும், அதிநுட்பமான புத்தியினின்று அன்பு உண்டாகி வளர்வதில்லை.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ் ரூ.	1-0-0
அமிர்தாமலக	”	0-12-0
பிருங்காமலக	”	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுதக டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 பேடென்ட் மருந்துகள் ஏமாற்றும். நஞ்சன்கூடு பல்பொடி சாதாரணம்-பாக்கெட். (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ரோஜா மாத்திரை. தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

சியவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலக்ஸ்

ஜவரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

வர்த்தமானம்

இங்கிலாந்தில் வகுப்புச் சண்டை:—இந்தியர் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதற்குச் செய்கின்ற முயற்சியை எள்ளினராய் ஆங்கிலேயர், "சாதிச் சண்டை, மதச்சண்டை, வகுப்புப்போர் இன்னும் ஒழிந்த பாடில்லை. இப்படிச் சிறுசண்டையில் உழல்வோர் நாடாள்வ தெப்படி" என்று கூறுவதுண்டு. ஆனால் அவர்கள் தங்கள் நிலையைப்பற்றி நினைப்பதில்லை. லிவர்பூல் நகரிலே 1933 ஜூலையில் நிகழ்ந்த ஒரு மதச் சண்டையைப்பற்றி இங்கிலாந்தில் இருந்துவரும் டாக்டர் சுதீந்திரபோஸ் ஜூலை மாதத்திய 'ஹிந்து' இதழில் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"லிவர்பூல், ஜூலை 1933—லிவர்பூலில் நெதர்பீல்டு வீதியில் பிராடஸ்டண்டு வகுப்பினருக்கும், கத்தோலிக் வகுப்பினருக்கும் பிணக்கு ஏற்பட்டு, அது பெரிய போராய் முடிந்தது. போலீசார் சண்டையை நிறுத்தி மீண்டும் கலகங்களொன்றும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளக் காவல் புரிந்து வந்தனர். இப்போலீஸ் பந்தோபஸ்து பலநாள் நீடிக்க நேர்ந்தது. இவ்வளவு காவலுக்கிடையேயும் அடுத்தடுத்துச் சண்டை நிகழ்ந்தது. பலர் காயமடைந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவரை விசாரணை செய்யுங்காலத்திலும், இரு கட்சியினரும் கோர்ட்டைத் தாக்கத் துவக்கினர். பிறகு போலீஸ்படை முயன்று கலகத்தை நிறுத்தியது. இத்தகைய நிலையிலிருப்பவர் பிறரைப் பரிகசிக்கப் புகுகின்றனர்."

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

காசி ஹிந்து கல்லூரி:—பண்டிதர் மதன்மோகன மாளவியா சென்ற ஒரு ஆண்டாக, தமது காசி ஹிந்துகல்லூரியில் பஞ்சமர்களையும், மற்றத் தாழ்ந்த வகுப்பினரையும் சேர்த்துக்கொண்டு வருகின்றாராம்.

*　*　*

குடியின் தீமை:—டாக்டர் ரோஷன் என்னும் ஓர் ஆங்கிலேயர் குடியினால் வரும் கேட்டை விளக்குகின்றார்:—

"குடிப்பதனால் ஒருவன் அடிக்கடி சிரிக்கின்றான். கை கால்களை அவசியமில்லாதபடி யாட்டிப் பொருளிலாவகைப் பேசுகின்றான். தன்னடக்கம் இல்லாமற் போகின்றது. மனவலிமை அழிகின்றது. பித்தனைப் போல் ஆகின்றான். நரம்புகள் பலஹீனப்படுகின்றன. கண் திருஷ்டியும் அவனுக்குக் குறைகின்றது."

அமிர்தசாகரம்

தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்
அமிர்தசாகரம் போன்றவை.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு	ரூ. 1 0 0
5 டப்பிகள்	ரூ. 4 0 0

இனும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஏஷ்யாடிக் கவர்ன்மெண்டு செக்யூரட்டி
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,
(மைசூரில் இணைக்கப்பட்டது)

பிரதான இந்திய சமஸ்தானத்தைச் சேர்ந்த இம் முற்போக்கு வாய்ந்த லைப் ஆபீஸ் இணையற்ற மிகவும் குறைந்த செலவில் நவீன அஷ்யூரன்ஸ் திட்டங்கள் யாவற்றையும் அளிக்கின்றது. நோய், விபத்து காலங்களில் சக்தியில்லாமலிருந்தால் அப்போது லாபங்களுடனும், தானாகவே பறிமுதல் செய்யப்பட முடியாத வசதியுடனும் கூடியது. பாலிஸிகள் பறிமுதல் செய்யப்படாமலும், ஆக்ஷேபிக்க முடியாமலும் உள்ளவை. பாலிஸி கெடுவடையும் காலத்தில் சாசுவதமான ஆதரவு கொடுப்பது. ஸ்திரீகளது ஆயுள்களுக்கும் இன்ஷியூர் செய்யப்படும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுக:—

V. ரங்கஸாமி பி. ஏ., பி. எல்.,
ஜெனரல் செக்ரிடரி & மானேஜர்.
பெங்களூர் ஸிடி.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)